உ








# ஞானச்சுடர்

## சித்திரை மலர் 2004






வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவை

உ

## குறள் வழி



"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை
அஞ்சல் அறிவார் தொழில்" [அஞ்சுவது

பொருள் :-

பயப்பட வேண்டிய பாவம் பழிகளுக்குப் பயப்படாமல் இருப்பது அறிவில்லாமை; பயப் பட வேண்டியவைகளுக்குப் பயப்படுதல் அறி வுடையோரின் செய்கையாகும் (428)



# நற்சிந்தனை

## குதம்பாய் 1

அண்டமும் பிண்டமும் ஒன்றோ இரண்டோவென்
றறியா திருந்தேனடி - குதம்பாய்
அறியா திருந்தேனடி

ஆதார மாறும் அவத்தையோ ரைந்தும்
அடியோடு போச்சுதடி - குதம்பாய்
அடியோடு போச்சுதடி

பாதார விந்தத்தைக் காணாமற் கண்டு
பணியாமற் பணிந்தேனடி - குதம்பாய்
பணியாமற் பணிந்தேனடி

# ஞானச்சுடர்



வெளியீடு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 76

## 2004 சித்திரை
## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| உலகளந்த மால... | சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் | 1 - 4 |
| கந்தரலங்காரம் | சி. வேலாயுதம் | 5 - 6 |
| அருணகிரிநாதர் | கு. கனகரத்தினம் | 7 - 10 |
| திருவருட் பயனின்... | திருமதி மாதேவிப்பிள்ளை | 11 - 12 |
| சிவனொடொக்கும்... | ச. சிவபாலசிங்கம் | 13 - 14 |
| முருக நாமத்தின்... | சி. நவரெத்தினம் | 15 - 16 |
| ஒழுக்கம் உடைமை... | நா. நல்லதம்பி | 17 - 19 |
| மானுடத்தை... | வ. குமாரசாமி ஐயர் | 20 - 22 |
| ஔவையார் அருளிச்செய்த நல்வழி | | 23 - 24 |
| யார் இந்தச்... | சச்சிதானந்த ஆச்சிரமம் | 25 - 26 |
| ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் | | 27 - 28 |
| பதிவலியில்... | சு. இலங்கநாயகம் | 29 - 31 |
| பாவியென்று நாம... | முருகவே பரமநாதன் | 32 - 34 |
| மகான்களின்... | கு. நவரத்தினராஜா | 35 - 37 |
| நித்திய அன்னப்பணி | | 38 - 39 |
| ஆட்கொண்ட... | சி. யோகேஸ்வரி | 40 - 42 |
| சந்நிதியான்... | ந. அரியரத்தினம் | 43 - 48 |



அன்பளிப்பு :- மலர் ஒன்று 30/- ரூபா

வருடசந்தா தபால்ச்செலவுடன் 385/- ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர்

அச்சுப்பதிப்பு :- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

## "ஞானச்சுடர்" பங்குனி மாத வெளியீடு

வெளியீட்டுரை :-

ஞானச்சுடர் மலரின் பங்குனிமாத மலருக்கான வெளியீட்டு ரையை யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு ஐ. செல்வராசா அவர்கள் வழங்கினார்கள்.

திரு ஐ. செல்வராசா அவர்கள் தனது ஆரம்ப உரையில் ஆச்சிரமத்தின் செயற்பாடுகளை விளக்கிக் கூறினார்கள். குறிப்பாக தற்பொழுது மேற்கொண்டுவரும் சமூகப்பணிகள் பற்றிக் குறிப்பிட்டு மக்கள் அதனால் பெற்று வருகின்ற நன்மைகளையும் வெளிப் படுத்தினார்கள்.

அதேபோன்று ஆத்மீகப்பணியில் ஞானச்சுடர் சஞ்சிகையின் மகத்துவத்தை அடியார்களுக்கு எடுத்துக்கூறி சஞ்சிகைமேலும் சிறப் புப் பெறுவதற்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

மதிப்பீட்டுரை :

எழுத்தாளரும் யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய ருமான திரு ஐ. சண்முகலிங்கம் (குப்பிளான் சண்முகம்) அவர்கள் மலருக்கான மதிப்புரையை நிகழ்த்தினார்கள்.

சந்நிதியான் ஆச்சிரமம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஆச்சி ரமத்தின் சுவாமிகள் திரு செ. மோகனதாஸ் அவர்கள் மிகவும் கஷ்ரப்பட்டு துவிச்சக்கரவண்டியில் பல இடங்களுக்கும் அலைந்து திரிந்தே ஆச்சிரமத்தை வளர்ச்சியடையச் செய்துள்ளார்கள் என் பதை எடுத்துக் கூறினார்கள்.

75 வது தடவையாக வெளிவரும் ஞானச்சுடர் ஆரம்பத்தில் பல்வேறு விடயங்களை உள்ளடக்கி வெளிவந்து தற்பொழுது ஆத்மீக விடயங்களை மட்டும் உள்ளடக்கி முழுமையான ஆத்மீக சஞ்சிகை யாகவெளிவந்து கொண்டிருக்கும் சிறப்பையும் சுட்டிக்காட்டினார்கள் ஆத்மீகம் என்றால் என்ன என்பதற்கான தனது கருத்தையும் திரு. சண்முகலிங்கம் அவர்கள் வெளிப்படுத்தினார்கள். உலகத்தில் எதை எதைச் செய்ய வேண்டுமென்ற கடமையிருக்கின்றதோ அத னைச் செய்வது தான் ஆத்மீகம் பாரதயுகத்தில் போர்க்களம், யுத் தம், இரத்தம் என்பன இடம்பெற்றாலும் அங்கே கடமைக்கு முக்கி யத்துவம் வழங்கப்பட்டதன்மையை சுட்டிக்காட்டினார்கள்.

ஞானச்சுடர் வருமானம் நோக்கிய விளம்பரத்தை வெளியிடு வதில்லை. ஆனால் கண் தான சபை போன்ற விளம்பரத்தை உள் ளடக்கியிருக்கும் சிறப்பையும் சுட்டிக்காட்டினார்கள். வாசகர் கடி தம் புதிய அம்சமாக இடம்பெற்றிருப்பதையும் பாராட்டினார்கள்.

சந்நிதி முருகன் பதிகம்

## வந்தெமக் கருளுவாயே

மண்டலத் துறை தமிழர் வாழ்வுயர வென்றீண்டு
வந்தவ தரித்த முருகா!
மாசற்ற கார்த்திகை மாதரா றுவருமன்று
மாண்புட னணைத்த அழகா!
அண்டர்களி கொள்ளவே அண்டபகி ரண்டனாய்
அன்றவ தரித்த முருகா!
அப்பனின் கைக்கனிக் காசைகொண் டவனியை
அன்று வலம் வந்த முருகா!
வண்டுது குழல்கொண்ட வள்ளிதெய் வானைக்கு
வரனாக வாய்த்த வரதா!
வாசனை வீசுமலர் மாலையொளிர் மார்பனே!
வளர் வேங்கை யான இறைவா!
வண்மைசெறி சந்நிதியில் வள்ளிதெய் வானையொடு
வாழ்வு கொள் கந்த வேளே.
வடிவேல் கரங் கொண்டு வண்ணமயில் மீதேறி
வந்தெமக் கருளு வாயே!

அரவணியு மத்தனரு ளன்புகனி மைந்தனே!
அம்மைசிவ காமி மகனே!
அடியவர்க டுயர் களையுமப்பனே! அறுமுகா!
ஆண்டலைக் கொடியை யுடையோய்
பிரவணத் துட்பொருளை அறியாது பிரமித்த
பீதி கொள் பிரம னாரைப்
பிடித்தடவ் கொண்டபெரு சிறைபுகச் செய்துயர்
பிரபலம் கொண்ட முருகா!
சரவணப் பொய்கையி லுதித்த நற் சண்முகா!
சடாட்சரா சுப்ர மண்யா!
தரித்திர மெனும் பிணியெ மைநலிய வைக்குதே
தயவொடுன் னருளை யீவாய்
வரமருள் சந்நிதியில் வள்ளிதெய் வானையொடு
வாழ்வு கொள் கந்தவேளே
வடிவேல் கரங்கொண்டு வண்ணமயில் மீதேறி
வந்தெமக் கருளு வாயே!

M. K. இளையப்பு (சமாதான நீதவான்

# சுடர் தரும் தகவல்

ஒருவன் இறையருளைப்பெற வேண்டுமானால் முதலில் அவனுக்கு இறைவன் மீதானநம்பிக்கையும் விருப்பமும் அவசியமானதாகும் அது மட்டுமன்றி அவ்வாறான இறையருளைப் பெறுவதற்காக அர்ப்பணிப் புடனும், விசுவாசத்துடனும் இறைவனைவழிபடுதல் மற்றும் இறை தொண்டு செய்தல்போன்ற செயற்பாடுகளில் எல்லாம் மக்கள் ஈடு படுவதையும் நாம் காண்கின்றோம்.

இதேபோன்று இவ்வுலக வாழ்க்கைக்கு எமக்கு மிகவும் அவசியமான கல்விச்செல்வத்தை நாம் பெற முயற்சிக்கின்ற பொழுதும் நாம் சில அடிப்படையான அம்சங்களை விளங்கிக் கொள்ளவேண்டியது அவசிய மானதாகும். அதாவது இறையருளைப் பெறுவதற்கு ஒருவனுக்கு இறைவன் மீதான நம்பிக்கையும் விருப்பமும் அவசியமானது போன்று கல்விச்செல்வத்தைப் பெறுவதற்கும் எமக்கு முதலில் கல்வியில் நம்பிக் கையும் விருப்பமும் மிகவும் அவசியமானதாகக் கருதப்படுகிறது. அது மட்டுமன்றி இறையருளைப் பெறுவதற்கு நாம் எவ்வாறு இறைவனி டம் அதனை இரந்து பெறுகின்றோமோ அதே போன்றுதான் கல்வி யையும் நாம் கீழ்ப்படிவுடனும் அடக்கத்துடனும் தான் பெற்றுக் கொள்ளமுடியும். இதேபோன்று இறையருளைப் பெறுவதற்காக ஒரு வன் எவ்வாறு தன்னை அர்ப்பணிக்கின்றானோ அதே போன்றுதான் கல்வியிலும் அர்ப்பணிப்பும் கடின உழைப்பும் அவசியமாகின்றது.

ஆகவே நாம் எமது சொத்தான கல்வியை மதித்து கல்வியில் நாம் முன்னேற வேண்டுமானால் அதனைப் பெறுவதற்கான அடிப் படையான அம்சங்களை முதலில் விளங்கிக் கொள்ளவேண்டும். அதா வது இறையருளைப் போன்று கல்வியும் புனிதமானது அந்த புனித மான கல்வியைப் பெறுவதற்குரிய பக்குவத்தை நாம் முதலில் எம்மில் ஏற்படுத்துவது அவசியமானதாகும்.

ஐரோப்பியர் காலத்தில் தமிழர்கள் கல்வியில் உயர் நிலையில் இருந்த நிலை மாறி இன்று பின் தள்ளப்பட்டிருப்பதற்கும் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை தாழ்ந்தமட்டத்தை அடைந்திருப்பதற் கும் பல்வேறு காரணங்கள் இருந்தாலும் இங்கே நாம் ஏற்கனவே குறிப்பிட்ட அடிப்படைக்காரணங்களான கல்வியால் வாழ்க்கையில் உயரலாம் என்ற நம்பிக்கை குறைவடைந்தமை அதனால் கல்வியில் விருப்பமோ அதைப்பெறவேண்டுமென்ற ஆர்வமோ அர்ப்பணிப்போ அடக்கமோ எல்லாம் குறைந்து போனதுதான் முக்கிய காரணங் களாகக் கருத வேண்டியுள்ளன. மேலும் கல்வியினுடைய புனிதத் தன்மையை மறந்து எம்மில் பலர் செயற்பட்டுக் கொண்டிருப்பதும் கவலைக்குரிய இன்னொரு முக்கியவிடயமாகும்.

உ

# சித்திரை மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

M. இந்திரசேகரம் குடும்பத்தினர்
( அவுஸ்திரேலியா )

R. ரவீந்திரன் குடும்பத்தினர்
( அவுஸ்திரேலியா )

K. லோகநாதன்
( அம்பாள் நகை மாடம் புத்தளம் )

S. மகேந்திரன் (தர்மகர்த்தா)
( கருமாரி அம்மன் தேவஸ்தானம் புத்தளம் )

டாக்டர் K. கைலாசபதி
( புத்தளம் )

P. இராசலிங்கம் (பேபி)
( லண்டன் )

டாக்டர் S. யோகேந்திரன்
( பொறுப்பதிகாரி, மத்திய மருந்தகம் தம்பிலுவில் )

P. அப்பாத்துரை
( களுபோவில தெகிவளை )

S. கனகசுந்தரம்
( லண்டன் )

ஸ்ரீ ஞானகுரு
( அவுஸ்திரேலியா )

திருமதி நல்லம்மா கிருஷ்ணபிள்ளை
( இடைக்காடு )

T. பரமேஸ்வரன் (கனடா)

தலைவர்
( சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் )

திரு நா. குகன்
( குகன் ஸ்டுடியோ பருத்தித்துறை )

திரு சோ. பாலேந்திரன்
( பாலன் விற்பனை நிலையம், பருத்தித்துறை )

திரு இ. மனோகரன்
( மனோ லைற், கோப்பாய் )

திரு தா. முத்துவேலு
( சந்நிதி வீதி, உடுப்பிட்டி )

திரு க. அருள்ஐயா
( ஆனைக்கோட்டை )

திரு S. சந்திரகுலம்
( துஷி மினி சினிமா, ஆவரங்கால் )

திரு ஆ. கி. அருணகிரிராசா
( இளை வர்த்தக முகாமையாளர் உடு. ப. நோ. கூ. சங்கம் )

திரு அ. தவராசசிங்கம்
( களஞ்சியப் பொறுப்பாளர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு க. ஜெயரத்தினம்
( சாரதி உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு சி. விபுலானந்த அடிகள்
( லிகிதர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு கு. மாணிக்கராசா
( கிளை முகாமையாளர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு ந. ஜெயக்குமார்
( விற்பனையாளர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு ச. மகாதேவன்
( ஜெயந்தி என்ரபிறைஸ் ஆவரங்கால் )

செயலாளர்
( செல்லப்பா ச. ச. நிலையம் உரும்பராய் ]

திரு சி. நந்தகுமார்
( வங்கி ஊழியர் உரும்பராய் )

உரிமையாளர்
( உமாபதி தொலைத்தொடர்பகம் உரும்பராய் )

திரு R. ஸ்ரீஸ்கந்தராம்
( தபாலதிபர் புன்னாலைக்கட்டுவன் )

திரு கு. லோகேந்திரன்
( மில் ஒழுங்கை, மல்லாகம் )

திரு இ. அருந்தவராசா
( விற்பனையாளர் வாசிகசாலையடி உடுப்பிட்டி ப. நோ. கூ. ச.)

திரு வீ. கிருஸ்ணராசா
(ஆசிரியர் மானிப்பாய் இந்துக்கல்லூரி )

திரு க. பாலசுப்பிரமணியம்
( பதிவாளர் 'இமையாணன் )

உ

# எல்லா நலமும் பெற



அருட்கவி விநாசித்தம்பி ஐயா அவர்கள் தற்காப்புக் கலைகளுக்கான ஜப்பானிய உள்ளகப் பல்கலைக்கழகத்தினால் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளார்.

ஆழ்ந்த புலமை ஞானம் கொண்ட ஐயா அவர்கள் பூரண தேக சுகத்துடன் எல்லா நலமும் பெற்று வாழ சந்நிதியானை வேண்டுகின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவை.

# உலகளந்த மாலவனும் உலகை வலம் வந்த வேலவனும்

திருமதி புவனேஸ்வரி பாலகிருஷ்ணன்



கலியுகத்தில் பக்திதான் கை கண்ட பலன் அளிக்கும் மோட்ச சாதனம். இனிய பக்திக்கு இருவர் குழந்தைத் தெய்வங்களாகக் கொண்டாடி மகிழ வேண்டியவர்கள். ஆகமப்படி தொழப் படும் தெய்வங்களிலும், அருமையாக அன்பு காட்டி நேசிக்கப் படுபவர்கள் தான் மாமனான மாலவனும், மருமகனான வேலவனும் பயங்கரமான தோற்ற முள்ள தெய்வங்களிடம் அன்பு உண்டாகாது, அச்சமே உண்டாகும். அழகான தெய்வத்திடம் அன்பும் ஆசையும் உண்டாகும். அதுவும் குழந்தைப் பருவ லீலைகளையுடைய தெய்வத்தைக் கொஞ்சி லாலனம் செய்து பிரேமையையும் காட்டலாம். இது பக்தியில் வாத்ஸல்ய பாவத்தையும், சிருங்கார ரசத்தையும் காட்டிப் பிரியமாகப் போற்றுவதாகும். இதற்கு ஏற்றாற்போல இருப்பவர் பரமாத்மாவான மாலவன். தம் பூரணாவதாரமான ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் பிறந்தது முதல் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியிலும் வாத்ஸல்யபாவம் சிருங்கார ரசம் வரையான பக்தியால் நேசிக்கும் படி இருந்தார், நடந்தார். எல்லா வகையான பக்தர்களும் அவருக்கு ஏற்பட்டு அவரைச் சேர்ந்தனர்.

மாலவனுக்கு அடுத்த படியாக அவரின் மருகனெனப்போற்றப்படும் வேலவனே அப்படிப் பக்திக்கு ஏற்றவனாக இருக்கிறான். மாலவனைப் போலப் பிள்ளைப்பருவ விளையாட்டும், வள்ளியிடம் காதல் ரசவிளையாட்டும், வேலவனுக்குண்டு. இதனால் வேலவனையும் வாத்ஸல்ய பக்தியால் நேசிக்கலாம். சிருங்கார ரசத்திலும் நாயகனாகப் பாவித்துப் பக்தி செய்யலாம். இருவரும் மனத்தைமயக்கும் மோகன வடிவமுள்ளவர்கள்.

★ நன்றி மறவேல் என்பது நல்லோர் வாக்கு. ★

திருமாலின் அவதாரமான மாலவனும் பிறக்கும் போதே அற்புத பாலகனாக நான்கு கைகளும், சங்கு சக்கரங்களும் கொண்டு சிறையில் தோன்றினார். பிறந்தவுடனே தாயைப் பார்த்துச் சிரித்தார். தந்தையிடம் பேசினார். சிறுவராக இருந்த போதே கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து இந்திரனின் கர்வத்தை ஒடுக்கினார். படைப்பவன் என்ற கர்வம் கொண்டு பசுக்களையும், கோபாலர்களையும் மறைத்து வைத்த பிரம்மாவின் கர்வத்தைத்தாமே பசுக்களாகவும், கோபாலர்களாகவும் மாறி ஓராண்டு காலம் அப்படியே வாழ்ந்து அடக்கியருளினார்.



வேலவனும், சிவனாரின் நெற்றிக் கண்ணில் தோன்றி, சரவணப்பொய்கையில் தவழ்ந்து கார்த்திகைப் பெண்களால் பாலூட்டி, தாலாட்டி, சீராட்டப் பெற்று, அன்னை அபிராமி அரவணைக்க ஆறுமுகப்பெருமானானவர். பிரணவப் பொருளறியாதபிரமனைக் குட்டிச்சிறையிலடைத்து அவரது காவமடக்கி பிரணவ அர்த்தம் கேட்ட தந்தைக்கே உபதேசித்த தகப்பன் சாமி. பாலமுருகன் லீலைகள் எண்ணிலடங்கா. ஓரிடத்திலிருந்து வீணையை எடுத்து இன்னிசைக் கானம் பொழிந்தான். அதியற்புதமான கான மழையால் பட்டுப்போன மரங்கள் துளிர் வளர்ந்தன. விலங்குகள் புல் மேய்வதை விட்டு கண்களை மூடி மெய்ம்மறந்து லயித்தன. பின்பு இனிமையான குழல் ஊதினான். பாலமுருகனின் பால லீலைகள் பார்த்து மகிழத்தக்கவை. குழந்தைக் கண்ணனும் கம்ஸனின் கொடுமைகளையெல்லாம் வென்று, ஆநிரைகளை மேய்த்து, வெண்ணெய் திருடி கோகுலத்தில் புரிந்த குறும்புகளும், விளையாட்டுக்களும் ஆனந்தமானவை. வேய்ங்குழலூதிப் பசுக்களையும், பறவைகளையும், மான்களையும், மரம், செடி கொடிகளையும், கோபியர்களையும் மெய்ம்மறந்து லயிக்கச் செய்தான்.

அந்தணச் சிறுவர்கள் படித்து வரும் பள்ளியில் சிவபாலன் முருகன் வேதம் ஓதி எல்லா மொழிகளையும் கற்றுத் தேர்ந்தான். தேவகிபாலனும் சாந்தீப முனிவரிடம் சகல கலைகளையும் கற்று விளங்கினார். மாலவன் யாதவ இனத்தாருடன் கலந்து பழகிக் களித்து வளர்ந்தவர். வேலவன் வேடுவ இனத்தாருடன் மாப்பிள்ளையாகி இணைந்தவர்

மாலவனுக்கு ருக்மணி, சத்திய பாமா என்றால்; வேலவனுக்கு வள்ளி, தேவயானை என இரு மனைவியர் முக்கியம். வள்ளியை மணக்கப்பெற முயற்சி செய்து வீரம் காட்டினார். மாலவனும் ஏழுகாளைகளை அடக்கி ஜாம் பவானைமல்யுத்தத்தில் வென்று, வில்வித்தையில் யாராலும் முடியாத திறமை காட்டியும் சயமந்தக மணியை மீட்டு வந்தும் முறையே சத்யவதி, ஜாம்பவதீ, லக்ஷ்மணை, சத்யபாமாவை மணந்தார். ருக்மணியைச்சிறை எடுத்து அண்ணன் பலராமர் உதவியுடன் மணந்தார். வேலவனும் தேவ சேனையை மணந்த பின்பு, வள்ளியை மணம் புரிவதற்காகச் சகோதரர் விநாயகர் உதவி புரிந்தார். இப்படி மாமனைப் போல் மருமகனுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு.

மாலவனும் அசுரரைப் போரில் மாய்த்தார். மாலவன் நரகாசுரனை, பாணாசுரனை பெரும் போர் செய்து ஒடுக்கினார் என்றால், வேலவன் சூர சம்காரம் செய்து புகழுக்குரியவர். மாலவன் தேவருக்கு உதவி புரிபவர். வேலவனும் தேவ சேனாதிபதியாகி அசுரருடன் உண்டான போரை நடாத்தி உதவினார்.

முருகனை வழிபட்டு உயர்ந்த யோகியரும், சித்தரும் கூட உளர். வள்ளலார் நேரில் தியானத்தில் முருகனைக் கண்டவர். நக்கீரர் பெரும் பக்தர். "நெற்றிக் கண்ணைக்காட்டினும் குற்றம் குற்றமே" என்று பரமனிடமே வாதாடியவர். திருமுருகாற்றுப்படை பாடிய முருக பக்தர். அருணகிரிநாதர் பெரும் யோக சித்தர். சித்தர் பலர் மாலவனையும், வேலவனையும் நவபாஷாணத்தால் சிலை செய்து, வணங்கிடும் பக்தர்களின் நோய், துன்பம் தீரவழி செய்தனர். பழனி முருகனும், நாசிக்கில் கிருஷ்ணனும் அவ்வாறு அமையப்பெற்றவர். பக்தரில் மாலவனுக்குக் குசேலர் போல, வேலவனுக்குத் தமிழ்ப் பாட்டி ஔவையார். குசேலருக்கு அவலாற் புகழ். ஔவைக்கு நாவற் பழத்தாற் புகழ். மாலவனுக்குச் சக்ராயுதம் போல முருகனுக்கு வேலாயுதம். பிரபஞ்சத்தையே காக்கும் பரமாத்மா மாலவன் வாமனனாக வந்து, திரிவிக்ரமனாக வளர்ந்து மூவுலகங்களையும் ஈரடிகளான சீரடிகளால் அளந்தான். அதன் சிறப்புக்கருதி "நெடியோன்" எனப்புகழப்படுகிறான். சூரனை வென்று தேவரைக்காத்த முருகவேள் வேலவனும் நெடிய வேலுள்ளவன். பெரிய வீரன் என்பதால் 'நெடியோன்' எனப் போற்றப்படுகிறான். மாமனைப்போல் மருமகனுக்கும் பெரும் புகழ். பால முருகனும் மாங்கனிக்காக நொடிப்பொழுதில் உலகை வலம் வந்தவன். மாங்கனி கிடைக்காத

★ சோம்பேறிப் பேச்சுப்பேசிப் பொழுதை வீணாக்காதே. ★

தால் அம்மை அப்பருடன் கோபித்துக்கொண்டு ஆண்டிக் கோலத்திற் பழனி மலையிலே குடிகொண்டவன்.

மாயோன் என மாலவன் அவதாரம் கண்ணன் கூறப்படு கிறான். இவர் ஆயரோடு வாழ்ந்து அவர்களைக் காத்த வர். காடும் காடுசார்ந்த முல்லை நிலத்திற்குக் கடவுளாகக் கண் ணனைக் கூறினர். வேலவனும் வேட்டுவகுலப் பெண் வள்ளியை மணம் முடித்து வேடர்குலம் காப்பவனாதலால் மலையும் மலைசார்ந்த இடமுமான குறிஞ்சி நிலத்தெய்வமாகக் கொண்டாடினர். குன்றிருக்கும் இடமெல்லாம் குமரனுக்கு ஆல யம் இருப்பதைப் போன்று, மாலவனும் குன்றுகளில் கோயில் கொண்டுள்ளான்.

மாலவன் பரமாத்மா வேல வன் அவருக்கு மருமகன் இன் றும் மாமனின் அம்சங்களுடன் மருமகன் பிறப்பதைக் காண் கிறோம். மாலவன் திருமகளை மார்பிலேவைத்து என்றும் மங் கலமாக இருப்பவன். வேலவன் மங்கலமாக ''சுப்ரஹ் மண்யன்'' என்று போற்றப்படுகிறான். மாலவன் பக்தர்கள் கண்ண தாசர்களாகவும் வேலவன் பக் தர்கள் முருகதாஸர்களாகவும் உள்ளனர்.

## இறைவனிடம் எதைக் கேட்பது?

இறைவனிடம் நாம் ஏதேதோ வேண்டும் என்று வேண்டுகிறோம். பொன் வேண்டும், பொருள்வேண்டும், வீடு வேண்டும் மாடுவேண்டும், பதவி வேண்டும் உதவி வேண்டும், என்றெல்லாம் கேட்கிறோம். எதைக்கேட்க வேண்டும் என்று நமக்குத்தெரியவில்லை. மேற்சொன்ன வைகள் எல்லாம் இந்திர ஜாலம் போல், கனவு நிலைபோல் தோன்றி மறையக்கூடியவை. அவைகளால் நமது ஆன்மாவுக்கு எந்தப் பயனும் இல்லை எத்தனை செல்வம் இருந்தாலும் உண்பது நாழி உடுப்பது நான்கு முழந்தானே! பல வீடுகள் இருப்பினும் படுப்பது ஆறடி இடத்தில்தானே? பொன்னும் பொருளும் ஓரளவு இருந்தால் சரி. அளவுக்கு மேல்போனால் அவையே பெரும் துன்பத்தைத் தரும். குளிப்பதற்கு ஒரு ஆறு அல்லது குளத்தில் தண்ணீர் இருக்க வேண்டும் மார்பளவு அல்லது இடுப்பளவு தண்ணீர் இருந்தால் அபாயமின்றிக் குளிக்கலாம். மிகுந்த ஆழமாக இருந்தால் அந்த நீரே நம்மைக் கொல்லும் அல்லவா! ஆகவே இந்த வரங்களையெல்லாம் கேட்காது இறைவனை நினைந்து உருகும் வரம் ஒன்றே கேட்க வேண்டும்.

★ புனித எண்ணங்கள் மனிதனுக்கு மிகவும் அவசியம் ★

[ தொடர்ச்சி...



# அருணகிரி சுவாமிகள் அருளிய
# கந்தரலங்காரம்

பண்டிதர் சி. வேலாயுதம்

## மோன நிலைப்பயன்

சொன்ன கிரெளஞ்ச கிரியூ டுருவத்துளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமெளனத் தையுற்று
நின்னை யுணர்ந்து ணர்ந்தெல்லா மொருங்கிய நிர்க்குணம்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே. ( பூண்

பொன்மயமானது என்று சொல்லப்பெற்ற கிரெளஞ்ச மலையின் உள்ளே புகுந்து துளைசெய்த கூரிய வேற்படையை உடைய இறைவா! (முருகா) கடப்ப மலரால் ஆகிய மாலையை அணிந்திருக்கும் மார்பை உடையவனே, மோனநிலையை எய்தி உன்னை எனதுள் அறிந்து அறிந்து பிறவற்றை உணரும் கருவியாகிய சித்த விருத்தி எல்லாம் அடங்கிய முக்குணங்களின் இயல்பற்று இருக்கும் நிலையை அடைந்து என்னையே உணராதிருந்தேன். அப்போது இந்தச் சரீர வாசனை ஒழிந்து விட்டது. ( சொன்ன - சுவர்ணம் - பொன் ) ( தன்னை மறந்தநிலை என்பது தற்போதம் ஒழியும்நிலை ) மெளனம் - மோனம்.

முக்குணங்களும் அற்றநிலை - நிர்க்குணம்

## ஈயாத் லோபிகட்கு அறிவுரைத்தல்

கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோ
யூழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்க ளத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் அடிப்பிறகே.

சேவற்கொடியுடைய முருகப் பெருமானின் திருவடிகளைத் தொழாமல் இப்பூமியின் கண்ணே வாழ்ந்திருக்க எண்ணும் அறிவீனர்களே! கொடிய வினைப்பயனாகிய விதியின் பெருவலிமையானது நீங்கள் தேடிய பொருளை (நீங்களே) அனுபவிக்க அனுமதிக்காது. ஆகவே, உங்கள் செல்வத்தையெல்லாம் ஆழமான இடங்களிலே பிறர் அறியாது புதைத்து வைப்பீராகில் ( நீங்கள் இறந்த பின்பு )

தேடிய செல்வம் எல்லாம் உமது காலடியைத் தொடர்ந்து உம் மோடு, கூடவருமோ. ( வராது )

ஊழிற் பெருவலியாவுள, செல்வத்தைப் பெற்றால் அதனை ஏழைகளின் வயிற்றிற் போட்டு வையுங்கள்.'' அவனுடைய அறிவெல் லாம் எமை அறியும் அறிவே''

## வேலும் மயிலும் துணைநின்றால் யமபயம் இல்லை

மரணப்ர மாத மெமக்கில்லை யாமென்றும் வாய்த்த துணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிங் கிணிமுகிள
சரணப்ர தாப சசிதேவி மாங்கல்ய தந்துர க்ஷா
பரணக்ரு பாகர ஞானா கரசுர பாஸ்கரனே.

கிண்கிணி பொருந்திய சதங்கை ஒலிக்கும் திருவடிச் சிறப் புடையவனே, தேவேந்திரன் தேவியான இரதிதேவியின் மாங்கல்யத் தைப் பாதுகாத்தவனே, அருளின் உறைவிடமானவனே, ஞானத் தின் இருப்பிடமானவனே, தேவர்களுக்குச் சூரியன் போன்றவனே, வேலும் மயிலும் எனக்கு என்றும் துணையாக உள்ளனவே ( ஆத லினால் ) மரணம் என்னும் ஆபத்து முருகனடியார்களாகிய எமக்கு இல்லை.

கலாபி - மயில், சரணம் - புகலிடம், தந்து - நூல் (தாலி) பாஸ்கரன்- சூரியன் உயிருக்கு வருவது ஆபத்து, உடலுக்கு வருவது விபத்து. சூரபன்மனால் இந்திரன் இறந்திருந்தால் சசிதேவி மாங்கல்யம் இழந் திருப்பாள்.

## வைதாரையும் வாழவைப்பான் முருகன்

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப்போன் வெய்யவாரணம் போற்
கைதா னிருபது டையான் தலைபத்தும் கத்தரிக்க
வெய்தான் மருக னுமையாள் பயந்த விலஞ்சியமே.

வண்டுகள் மொய்க்கின்ற மலர்மாலையை அணிந்த கூந்தலினை யுடைய வள்ளிநாயகியாரை விரும்பி மணந்தவன் முத்தமிழாலான கவிதைகளால் நிந்தித்துப் பாடியவரையும் தமது கந்தமோட்சத்திற் சிறப்புடன் வாழ வைப்பவன், அவன் யாரெனில், கொடிய மதங் கொண்ட யானையை ஒத்தவனும், இருபது கைகளை உடையவனு மாகிய இராவணனது பத்துத் தலைகளும் வெட்டுண்டு விழும்படி அம்பு தொடுத்த ஸ்ரீ இராமனின் (மாயோன்) மருமகனும், உமை யவள் பெற்றெடுத்த அருட்களஞ்சியமுமாகிய முருகப்பெருமானே ஆவான். ( தொடரும்...

★ சமயம் வேறு வாழ்க்கை வேறல்ல. ★

# அருணகிரிநாதர்

கு. கனகரத்தினம் (கனடா)

முருகப் பெருமான் அடியார்களுள் தலைசிறந்தவர் அருணகிரி நாதர். அவர் பற்றிய வரலாறு சரியாக எழுதி வைக்கப் படாவிடினும் செவி வழிக் கதைகள், அவர் பற்றிய பாடல்கள் வாயிலாகச்சில வரலாற்று உண்மைகளை அறிய முடிகிறது. அவர் நினைக்க முத்திதரும் திருவண்ணாமலையில் அவதரித்தார் என்றும், காவிரி கடலோடு கலக்கும் இடமாகிய காவிரிபூம் பட்டினத்தில் அவதரித்தார் என்றும் பேசப்படுகிறது. அவர் எவ்விடத்தில் அவதரித்திருப்பினும் அவர் ஓர் அவதார புருடர் என்பது உண்மையேயாகும். அவர் தந்தையார் திருவெண்காடர் என்றும் தாயார் முத்தம்மை என்றும் தமக்கையார் ஆதிலட்சுமி என்றும் சொல்லப் படுகிறது. ஆதிலட்சுமி திருவண்ணாமலையில் வாழ்ந்து வந்தார். அருணகிரி, அம்மை அப்பரை இழந்த பின் தமக்கையார் ஆதரவில் வளர்ந்தார். வாழ்ந்த காலம் கி. பி 15ம் நூற்றாண்டு என்று சொல்லப்படுகிறதுஅவர்தம்வாலிபப் பருவத்தில் மகளிர் பாற் கொண்ட மையலால் அதுவே இன்ப வாழ்வென மகளிரொடு



உறவாடுவதிலே காலம் கழித்தார். அதனால் அவரைத் தொழுநோய் பற்றி வருத்தியது அவருக்கு அக்கா ஆதிலட்சுமியின் ஆதரவைத் தவிர வேறு உற்றார் உறவினர் ஆதரவு இருக்கவில்லை. அவரைப் பற்றிய நோயும் நீங்கவில்லை திருவண்ணாமலை வீதிகளில் அலைந்து திரிந்தார். ஒரு நாள் பூர்வபுண்ணிய வசத்தால் அண்ணாமலைப் பெருமான் மானுட உருவில் அவர் முன் தோன்றிக் ''குன்றிலாடுங் குமரனைக் கும்பிடு'' என்று சொல்லி மறைந்தார். குன்றிலாடும் குமரன் பற்றிய எண்ணம் அவர் மனத்தில் தோன்றியது. அண்ணாமலைப் பெருமான் கோயில் வடபா

★ மனிதன் உயர்வது விதியால் அல்ல. ★

ளுள்ள வல்லாள மன்னன் கோபுரத்தின் பக்கமாகச் சென்று அமர்ந்து முருகப் பெருமானைத் தியானம் பண்ணினார். அவர் நோய் அகலாது வருத்திக் கொண்டிருந்தது. அதனால் உடலைத் துறக்கத் துணிந்தார். ஒரு நாள் தான் தங்கியிருந்த கோபுரத்தின் உச்சி மீது ஏறினார். முருக நாமங்களைச் சொல்லிக் கொண்டு கீழே குதித்தார். என்ன அதிசயம்! அவர் கும்பிட்ட குமரப் பெருமான் மானுட உருவில் நின்று இரு கரங்களாலும் அருணகிரியை ஏந்தி நின்று ''சும்மா இரு சொல்லற'' என அவர் காதில் ஞானோபதேசம் பண்ணி மறைந்தார். நோயும் அகன்றது. அதன் பின் பலகாலம் தவ நெறியில் நின்றார். ஒரு நாள் தேவர் கனவிலும் கண்டறியாதவனாகிய முருகன் பச்சைமயில் மேல் அவர் முன் தோன்றி அருணகிரிநாதா என அழைத்து ஆட் கொண்டு வேலினால் அவர் நாவில் பிரணவ மந்திரத்தை எழுதி அருள் செய்து திருப்புகழ் பாடுக எனப் பணித்தார். அப்பொழுது அவர் வேதாகமங்களுக்கும் எட்டாத நின் புகழை எப்படிப் பாடுவேன் எனக் குறையிரந்து நின்றார் பெருமான் எல்லா ஞானங்களையும் அருளி, முத்தைத்தரு என அடியும் எடுத்துக் கொடுத்தார். அருணகிரி நாதர் நாவில் தமிழ் வெள்ளம் பெருக்கெடுத்தது. ''முத்தைத் தரு பத்தித் திரு நகை ''எனும் திருப்புகழைப் பாடினார். மீண்டும் தவ நெறியில் ஒடுங்கி இருந்தார். 'வயலூருக்கு வா'' என அசரீரி, கேட்டது அவ்வாக்கை ஏற்று வயலூர் சென்றார். அங்குள்ள சத்தி தீர்த்தத்தில் நீராடி எழுந்து முருகனை வழிபட்டார் அங்கு முருகப் பெருமான் ஒரு முகம் நான்கு திருக்கரங்களுடனும் காட்சி கொடுத்துத் திருப்புகழைத் தொடர்ந்து பாடுக என அருள் வழங்கினார்.

''வயலி நகரியில் அருள்பெற மயில்மிசை
உதவுபரிமள மதுகர வெகுவித
வனசமலரடி கனவிலும் நனவிலும் மறவேனே''

என வயலூர் வள்ளலைப் பாடினார். மேலும் முருகப்பெருமான் எழுந்தருளிய பல தலங்களுக்கும் சென்று பெருமான் மேல் திருப்புகழ் பாடினார், பரவினார்: அவர் பாடிய திருப்புகழ்ப் பாடல்கள் பதினாறாயிரம் என்று பேசப்படுகிறது. அவற்றில் ஒரு பகுதிப் பாடல்களே வெளிவந்துள்ளன. அவர் பழனியில் தரிசனம் பண்ணிய போது பெருமானிடம் செபமாலை பெற்றார். அதனைப் புகழ்ந்து 'அபகார நிந்தை பட்டுழலாதே' எனும் திருப்புகழில்

★ உள்ளதைச் சொன்னால் ஊருக்குப் பகை. ★

'செபமாலை கந்த சற்குருநாதா
திருவாவினன் குடிப்பெருமாளே'' எனப்பாடியுள்ளார்.

பழனியில் முருகபக்தராகிய கலிசைச் சேவகனார் என்னும் பெயருடைய சிற்றரசர் அருணகிரி நாதருக்கு நண்பரானார் அந்த நண்பருக்கு ஒரு சமயம் மிக்க தலைவலி வந்தது அந்த நோயைத் 'தலைவலி மருத்தீடு என்னும் திருப்புகழ்பாடி நீக்கி அருளினார். அவர் பெயர் திருப்புகழ்ப் பாடல்களில் வருவதைக் காணலாம். பின் பழனியிலிருந்து திருச்செந்தூர் சென்றார். முருகனைப் பாடித் திருநடன தரிசனம் பெற்றார். இதன் நினைவாகத் திருச்செந்தூர்ப் பெருவிழாவில் ஏழாம் நாள் விழாவில் ஆறுமுகப் பெருமான் புறப்பாட்டில் பின் புறம் கூத்தப் பெருமானாக அலங்காரம் செய்து காட்டுகின்றனர். அவர் திருத்தணி சென்று தரிசனம் பண்ணினார். அங்கும் கூத்தனின் கூத்தினைக் கண்டுகளித்தார். திருவேரகம் சென்று சுவாமி நாதனைத் தரிசனம் செய்தபோது சுவாமியிடம் உபதேசம் பெற்றார். அவர் வடக்கே காசிவரை சென்று பல தலங்களைத் தரிசனம் பண்ணினார். திருப்புகழ்பாடினார். தெற்கே இலங்கை வரை சென்றார். அங்குள்ள கதிர்காமம், கோணேஸ்வரம் முதலிய தலங்களைத் தரிசித்துத் திருப்புகழ் பாடினார்.

சனியூரில் புலவர் வில்லிபுத்தூரரைச் சந்தித்தார். வில்லிபுத்தூரர் தம்மோடு வாதிட்டுத் தோல்வியுற்ற புலவர்களின் செவிகளை அறுத்தெடுப்பவர் அவரின் இச்செயலை மாற்றக்கருதிய அருணகிரிநாதர் அவருடன் வாதிட்டுக் கந்தரந்தாதி பாடி அவரை வென்று அவரைத் திருத்தி அருள் புரிந்தார். இச்செயலை

''எதிரும் புலவன் வில்லிதொழ எந்தை உனக்கு அந்தாதிசொல்லி
ஏழைப்புலவர் செவிகுருத் தொடுஎறியுங் கருவிபறித்தெறிந்தே'

எனவரும் திருமலை முருகன்பிள்ளைத் தமிழ்ப்பாடலால் அறிய முடிகிறது.

மேலும் அருணகிரிநாதர் காலத்தில் சம்பந்தாண்டான் எனும் பெயருடைய ஒருவன் இருந்தான். அவன் காளி உபாசகன். அக்காலத்தில் அண்ணாமலையில் வாழ்ந்த பிரபுட தேவ மன்னனுடன் அருணகிரியார் நட்புக் கொண்டிருந்தது சம்பந்தாண்டானுக்கு எரிச்சலைஉண்டு பண்ணியது அவ்இருவர் நட்புக்கும் பங்கம் விளைவிக்க எண்ணி

னான். மன்னனிடம் சென்று மன்னா! நான் உபாசனை செய்யும் தேவியை என்னால் உமக்குக் காட்ட முடியும் அருணகிரியால், தான் உபாசிக்கும் முருகனை உமக்குக்காட்ட முடியுமா? என வினாவி அருணகிரியாரை வாதுக்கழைத்தான். அருணகிரியாரும் வாதுக்கு முகம் கொடுத்தார். சம்பந்தாண்டானால் மன்னன் காட்சிக்குத் தேவியைக் காட்ட முடியவில்லை. அருணகிரியார் அண்ணாமலைச் சிவகங்கைக் கரையிலுள்ள பதினாறு கால் மண்டபத்தில் ஈசானத் தூணிலிருந்து அழகன் முருகனை வருவித்துக் காட்டினார். அரசன் அக்காட்சியைக் கண்டு பேரானந்த வெள்ளத்துள்மூழ்கினான். இந் நிகழ்வு சம்பந்தாண்டானின் பொறாமையை மேலும் வளர்த்தது. மன்னன் அதனை அறியாதவனாயிருந்தான். ஒருபொழுது மன்னன் கண்ணொளி குன்றியது அதனைப் போக்குவதற்குப் பாரிசாத மலர் வேண்டியதாக இருந்தது. அதுதேவருலகத்துக் குரியது அங்கு சென்று பெற்றுத் தருமாறு மன்னன் அருணகிரியாரிடம் கேட்டான் மன்னன் வேண்டுகோளை ஏற்ற பெருமகனார், அட்டசித்திகளும் கைகூடிய வராதலின் அருணை மேற்புறமுள்ள கோபுரத்தில் தன்னுடலை வைத்து அங்கு இறந்து கிடந்தகிளியின் உடலிற் புகுந்து பறந்து விண்ணுலகம் சென்று பாரிசாதமலர் கொண்டுவந்தார். அவர் கிளியுருவில் வந்து அமர்ந்த கோபுரம் கிளிக்கோபுரம் என்று இன்றும் சொல்லுவார்கள். அவர் கொண்டு வந்த பரிசாத மலரினால் அரசன் கண்ணொளி பெற்றான். அம்மலரின் மணத்தினால் அங்கிருந்த கண்ணொளி இழந்த ஏனைய பலரும்கண்ணொளி பெற்றார்கள். அப்போது அருணகிரி நாதர் கிளியுருவில் இருந்தபடியே கந்தரநுபூதி என்னும் அரிய பிரபந்தத்தைப் பாடினார்.

அவர் கிளியுருவில் சென்ற போது வஞ்சனாகிய சம்பந்தாண்டான் அரசனுக்கு உண்மையைச் சொல்லாது அவர் இறந்து விட்டதாகச் சொல்லி அரசன் அனுசரணையுடன் உடலைத் தகனம் செய்து விட்டான். அவர் கிளியுருவில் வந்த போது உண்மையை அறிந்த மன்னன் உடல் தகனஞ் செய்த இடத்தில் மண்டபம் கட்டித் தன் பூச்சரக் குடையை அவ்விடத்தில் நாட்டி அஞ்சலி செய்தான். அருணகிரி நாதர் எல்லோருக்கும் பழைய உருவங் காட்டி அருள் புரிந்து ஆனிமாதம் பௌர்ணமி கூடிய மூலநட்சத்திர தினத்தில்கந்தவேளின் கழலிற் கலந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

அருணகிரி நாதர் பாதமலர் போற்றி

கோபம் அறிவைக் கெடுக்கும்.

உ

(தொடர்ச்சி...

# திருவருட் பயனின் வசனரூபம்

திருமதி மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி

## ஏழாம் அதிகாரம்

அறியும் நெறியில் நின்று அறிந்த ஆன்மா உயிர்விளக்கம் பெறுவதை அதாவது ஆன்மசுத்தி பெறுவதைக் கூறும்.

### உயிர் விளக்கமாகும்

அருளுக்கு முன்னே நிற்கும் ஆன்மா சிவத்தைக் காணாமைக்குக் காரணம்.- ஆன்மா தனது ஐம்புலன்களையும் கருவியாசக் கொண்டு அறியமுற்படுவதே அவ்வாறு சிவத்தைக் காணாமைக்குக் காரணமாகும். மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய பொறிகளாற் கண்டறிவதற்கு அப்பாற்பட்ட பொருளாகிய சிவத்தை அறிவதற்கு அத்திருவருளின் துணையே இன்றியமையாததாகும்.

ஆன்மா சிவத்தைத்தானே தனது வலிமையினாற் காண்பேன் எனல் பொருந்தாது:- ஒருவர் பிரதி உபகாரம் கருதாது, நாம் விரும்பிய பொருளை நமக்குத் தருவாராயின், அதற்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறன்றி நமது வலிமையினாலே அதனைப் பெற்றோம் என்று கூறுவது சற்றேனும் பொருந்தாது.

அதுபோலவே திருவருளானது தானே விரும்பி எமக்குப் பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்கும் பொழுது, நாம் அதனை மறந்து, நம்முடைய ஆற்றலால் அதனைப் பெற்றோம் என்று எண்ணுதல் பெருந்தவறாகும்.

ஆன்மா உயிர்விளக்கம் பெறுமாற்றத்தைத் தொகுத்துப்பார்ப்போம்:- வெயிலினால் வருந்தும் ஒருவன் நிழலை கண்டவுடன், விரைந்தோடிச் சென்று நிழலை அடைந்து சுகம்பெறுவது போல, மலங்களின் தாக்கங்களினால் வருந்திய ஆன்மா, திருவருளைக் கண்டவுடன் திருவருளோடு சேர்ந்து தனது ஆன்மபோதம் கெட்டுத் திருவருளின் தன்மையைச் சாரும். அதனால் அது சிவத்தின் தன்மையை அறியும். திருவருளானது தனக்குத் துணை என்பதையும் அறியும்.

ஆணவ மலம் தன்னைச் சார்ந்த ஆன்மாக்களுக்கு முழுமுதலாகிய சிவத்தை மறைத்து, உலக இன்பங்களைக்காட்டத் திருவருளோ, தன்னைச் சார்ந்த ஆன்மாக்களுக்கு முழுமுதலாகிய சிவத்

தைக் காட்டி, உலக இன்பங்களை மறைக்கும். இறைவன் தன்னையே ஆதாரமாகக் கொண்டு, ஒழுகுகின்ற ஆன்மாக்களின் வினைப்பயன் களைத் தாமே ஏற்று, அவர்களுக்கு அருள்புரிதலால், எல்லாம் சிவன் செயலே என்று ஒப்படைத்தவர்களின் இன்பதுன்பங்கள் அவர் களைச் சாரா ஆன்மா பேரின்பத்தை அடைய வேண்டுமானால் பேரின்பத்திற்குத் துணையாய் இருக்கிற திருவருளின் துணையே அதற்கு இன்றியமையாததாகும்.

இருளில் இருக்கிற பளிங்குத் தூண், சூரிய ஒளியைப்பெறும் பொழுது ஒளிமயமாக விளங்கி, சூரியன் உச்சிப்பொழுதை அடை யும் பொழுது, அப்பளிங்குத்தூணின் ஒளி சூரிய ஒளியுள் மறைந்து முற்று முழுதாகச் சூரிய ஒளியாகவே பிரகாசிக்கிறது போல, ஆணவ இருளில் மயங்கி இருக்கும் ஆன்மா, ஞான உணர்வாகிய சூரியன் தோன்ற, ஆணவ வலிமை கெடத், தன்னுணர்வோடு நின்று மேலும் மேலும் ஞான ஒளியாகிய சூரியனால் அறிவுப் பிரகாசம் பெற்று ஞானஒளியாகிய சூரியன் உச்ச நிலையை அடைய ஆன்மபோதம் முற்றாகவே கெடச் சிவபோதத்தினாற் பிரகாசம் அடைந்து அத னுள்ளே அடங்கிக்கிடக்கும்.

இராக்காலத்தில் இருளிலே ஒருபொருளைத் தேடி எடுக்க முயல்பவன், விளக்கை முன்னே பிடித்துத் தான் அதன் பின்னே சென்று, தான் விரும்பிய அப்பொருளைத் தேடி எடுப்பது போலச் சிவத்தை அடையவிரும்பும் ஆணவமலத்தாற் பீடிக்கப்பட்ட ஆன்மா திருவருளாகிய விளக்கை முன்னாகக் கொண்டு, அதன்வழி அதன் பின்னாலே சென்றாலே சிவத்தை அடையலாம். ஐம்பொறிகளாற் கண்டறியும் பொருள்களுக்கு அப்பாற்பட்ட பொருளாகிய சிவத்தை அடைவதற்குத், திருவருளின் துணையேயன்றிவேறெவையும் பயன் படாவாம்.

திருவருளே சிவானந்தப் பெரும்பேற்றைத் தானாகவே விரும் பிப் பக்குவான்மாக்களுக்குக் கொடுத்தருளும் போது, ஆன்மாக்கள் தாமே தமது வலிமையினாற் பெற்றோமென்பது சற்றேனும் பொருந் தாது.


அன்பர்களே! உயிர்விளக்கத்தின் தன்மைகளைச் சிந்திக்கும் பொழுது, மலங்களின் தாக்கங்களினால் உழலும் நாம், ஆணவ மலத்தின் பிடியினின்றும் விடுபடுவதற்குத் திருவருளையே நாடி, அதன் வழியிற்சென்று, அதன் துணையை இறுகப்பற்றுவோமானால், திருவருளால் ஞானஒளி தோன்றப்பெற்று அறிவு விளக்கம் பெறுவ துடன், பேரின்பப் பெருவாழ்வையும் பெறுதற்கு வழிபிறக்கும் என் பதை உணர்வோமாக. (தொடரும்...

★ மனதில் ஆசையை குடிகொள்ள விடாதே ★

பார்வைக் குறைபாடு உடைய பொலிகண்டி தங்கராசா என்பவருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட பெறுமதி வாய்ந்த மூக்குக்கண்ணாடியை நீர்வை கு. தியாகராஜ சர்மா அவர்களால் வழங்கப்படும் நிகழ்வு.



வல்வெட்டி சமரபாகுவைச் சேர்ந்த கனகரத்தினம் சுதாகரன் என்பவருக்கு ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட முச்சக்கர வண்டியினை பிரபல சட்டத்தரணி இ.உருத்திரா அவர்களால் வழங்கப்பட்ட நிகழ்வு.



உ



# சிவனொடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை அவனொடொப்பார் இங்கு யாரும் இல்லை

(திருமந்திரம்)

ச. சிவபாலசிங்கம்

ஆதிகாலம் தொட்டு இந்துக்கள் சிவபெருமான் மீது நம்பிக்கை வைத்து, அவருக்கு ஆலயம் அமைத்து, அவரை வழிபட்டு அவர் புகழைப்பாடி அன்புடனும் நிம்மதியுடனும் வாழ்ந்து வந்துள்ளனர். ஒன்றே உலகம், ஒன்றே மானுடம், ஒருவரே கடவுள் என நம்பி வந்தனர். பின்பு கிறிஸ்தவ மதம் யேசு கிறிஸ்து எனும் பரிசுத்த ஆன்மாவால் 2000 ஆண்டுகட்கு முன்பும், பௌத்த மதம் கௌதம புத்தர் எனும் துறவியால் 2500 ஆண்டுகட்கு முன்பும் சமணமதம் மகாவீரரால் கி.மு 2500 ஆண்டுவரையிலும், இஸ்லாம் முகம்மது நபியால் 1400ஆண்டுகட்கு முன்பும், 2500 ஆண்டு காலப் பகுதியில் ராஓகிசம், கொன்பியூசியானிசம், ஷின்ரோ இசம், சொறோஸ்ரியானிசம் என்பன உருவாகின. ஆனால் இந்து மதத்துக்குக் கால எல்லையோ, யாரால் தோற்றுவிக்கப்பட்டதென்றோ வரையறை கிடையாது. முழுமுதற் கடவுளாய் பிரபஞ்சத்தை உருவாக்கியவர் சிவபெருமானே. ஒரு நாமம் ஒருருவம் இல்லாத இறைவனுக்குப் பற்பல உருவங்களும் பெயர்களும் வழங்கி வந்தன. அவரை ஈஸ்வரனாகவும், அம்பிகையாகவும், விநாயகராகவும், முருகனாகவும், வயிரவராகவும் வழிபட்டு வந்தனர், வருகின்றனர். இந்துக்களுக்கு கடவுளர் பலர் என்று பிற மதத்தவர் நினைக்கின்றனர். இது தவிர்க்க முடியாத சமூக வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாகும். நினைவுக்கெட்டாக் காலங்களிலிருந்து பல இனமக்கள், பழங்குடியினர், மலை வாழ் சாதியினர், பன்மொழியாளர்கள், பல வித மத ஆசாரங்களைக் கொண்டவர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர், இன்னும் வாழ்கின்றனர். எல்லோருக்கும் முழுமுதற் கடவுள் ஆதிபகவானாகிய சிவபெருமானே. பாரம்பரியமும் ஸ்தாபனங்களும், உபநிடதப்பின்னணியில் பின்னப்பட்டுப் படிப்படியாகப் பல்லாண்டு காலப்போக்கில் ஒரு மத ஒழுங்கு முறைக்கு உள்வாங்கப்பட்டன. பல் வகையில் ஒற்றுமையைக்காண விசேட புராணங்கள் எழுதப்பட்டன. இந்து மதம் எந்த நம்பிக்கைக்

★ பேச்சை விட மௌனமே சிறந்தது. ★

குழுவையும் அழிக்காது. அவற்றை மாபெரும் இந்து தர்மத்தில் ஒன்றிணைத்தது.

போர்த்துக்கீசர், டச்சுக் காரர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில்கோயில்கள் இடிக்கப் பட்டாலும், சமயாராதனைக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டா லும், கிறிஸ்தவ மதம் பரப்பப் பட்டாலும் இந்து மதம் அதிகம் பாதிப்படையாமல் பூர்வீக முறைகளில் அனுசரிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் சென்ற அரை நூற்றாண்டு காலமாக தமிழ் நாட்டில் பிராமணர் மீதான துவேஷம், பிள்ளையார் சிலைகள் உடைப்பு, நாத்திகப் பிரசாரம் என்பவற்றால் எமது நாட்டிலும் இந்து மதம் நலி வடைய ஆரம்பித்தது. பின்பு இலங்கை வந்த மிஷன் சுவாமி மார்கள் சிலர் உரையாளர்கள் ஆகியோரின் சுயநல வியாக்கி யானங்களால் பூசை, வழிபாடு, பஜனை என்பன மாற்றமடை யத் தொடங்கின. மக்களும் திடீர் நன்மைகளை எதிர் பார்த்துப் பாரம்பரிய முறை களை மாற்றினர். உதாரண மாக, திருமுறைகள் ஓத வேண் டிய சமயங்களில் சுவாமியார் மீது பஜனை பாடத் தொடங் கினர். முன்பு ஓங்காரமும் விபூதி யும் உருத்திராக்கமும் சிவசின் னங்களாயிருந்தன. இப்போது குரிசு, தம்மசக்கரம், பிறை போன்ற வேற்று மதச்சின்னங் களையும், இந்துக் கடவுளர் படங்களோடு சுவாமிமார், ஆஞ்சநேயர் ஆகியோரின் படங் களையும் பீடத்தில் வைத்தும் சுவரில் தொங்க விட்டும் வழி பாட்டிலும் பஜனையிலும் ஈடு படுகின்றனர் இக்கால இந்துக் கள்.

கடவுள் யார், அவரை எவ் வெவ்விதமாக வழிபட வேண்டும் என்ன சிவதொண்டு செய்ய வேண்டும், பெறும் பலன் என்ன என்பன பற்றி வேதாகமங்களும் திருமுறைகளும் விரிவாக எடுத் துக் கூறியுள்ளன. சைவ நாயன் மார்களின் அருட் செயல்கள் யாவும் சிவபரம்பொருளின் கரு ணைப் பெருக்கின் வெளிப் பாடேயாகும். அவரவர் பக்குவ நிலைக்கேற்ப, கண்ணாரக் கண் டும், உள்ளுர உணர்ந்தும், இறைவன் புரிந்த அருள்வெளிப் பாட்டால் திருமுறை அமுதம் ஊற்றெடுத்தது, அருளாளர் கள் 18449 பாடல்களை நெக்குருகிப் பாடி எமக்கு அளித் துச் சென்றனர். பெருந்தொகை யான பாடல் ஏடுகள் அழிந்து போனமையும் நாம் அறிந்ததே.

(தொடரும் ...

உ

# முருக நாமத்தின் மகிமை

சி. நவரெத்தினம்

முருகப் பெருமானின் நாமங்கள் பலப்பல அவற்றுள் குகன் எனும் திருநாமமும் ஒன்றாகும். குகன் என்பது அடியவர்களது உள்ளமாகிய குகையில் வீற்றிருப்பவன் எனப் பொருள்படும். குகை என்பது இருள் மயமாகக் காணப்படும். இதனுட் சென்று ஏதாவது பொருட்களைத் தேட வேண்டுமாயின் ஒளிமயமான ஏதாவது விளக்குவேண்டும். இந்த விளக்கின் மூலம் குகையின் இருள் நீங்கி ஒளி விகசிக்கின்றது இது போலவே அடியவர்களுடைய உள்ளம் மலங்களாகிய இருளால் மறைக்கப்பட்டு இருள் போன்று காணப்படுகின்றது. இந்த இருளைப்போக்க அடியவர்களின் உள்ளத்தில் முருகப்பெருமான் வீற்றிருந்து ஞானமாகிய ஒளியைக் கொடுத்து மலமாகிய அவ்விருளை நீக்கியருளுகின்றார்.

கங்கைக்கரையில் முனிவர் ஒருவர் தவம் செய்து கொண்டிருந்தார் அப்பகுதியிலுள்ள காட்டிற்கு மன்னன் ஒருவன் மிருக வேட்டையின் பொருட்டு வந்து ஒரு மிருகத்திற்கு அம்பொன்றை விட்டான். அம்பு குறிதவறி அங்கே தவம் செய்து கொண்டிருந்த முனிவர் மீதுபட்டதும் அவர் உயிர்துறந்தார். இதனால் மன்னனுக்குப் பிரம்மஹத்தி தோஷம் பீடித்து விட்டது. இச்செயலால் மன்னன் பயந்து இத்தோஷம் நீங்கப் பிராயச்சித்தம் அறியும் பொருட்டு அக்கரையில் வசிக்கும் இன்னொரு முனிவரின் ஆச்சிரமத்தற்குச் சென்றான் அங்கே முனிவர் இருக்கவில்லை அவரது சிறுவயது மகன் ஒருவன் தான் இருந்தான். மன்னன், தான் வந்த நோக்கத்தை அச்சிறுவனிடம் கூறிவிட்டுப் புறப்பட முயன்றார். அச்சிறுவனோ 'மன்னா வருந்த வேண்டாம், பிரம்மஹத்திதீர நான் வழி சொல்லுகிறேன். சிறுவனாக இருந்தாலும்நான்பிராயச்சித்தம் சொல்கிறேன். கங்கையில் நீராடி வட திசையில் நின்று மனத்தை ஒரு நிலைப்படுத்தி உள்ளம்உருக 'முருகா! முருகா! முருகா! என்று மூன்று முறை சொல்லுங்கள்.

உங்களைப் பீடித்த பிரம்மஹத்தி நீங்கும்'' என்றான். அச்சிறுவன் கூறியது போன்று அரசனும் கங்கைக்கரைக்குச் சென்று வடதிசையில் நின்று சித்தத்தை ஒருமுகப்படுத்தி, உள்ளம் உருகி

முருகா! முருகா! முருகா! என்று மூன்று முறை கூறியதும் அவனைப் பீடித்திருந்த பிரம்மஹத்திதோஷம் நீங்கியது. பின்னர் மன்னன் முனிவர் மகனை வணங்கிவிட்டு நாடு திரும்பினான்.

மாலையானதும் முனிவர் தன் ஆச்சிரமத்தை அடைந்தார். ஆச்சிரமத்தில் முற்புறத்தில் இரதச்சில்லுகளின் சுவட்டினைக் கண்ணுற்றார். சிறுவனை நோக்கி இங்கே யார் வந்தது என்று வினவ மகனும் நடந்தவற்றையெல்லாம் முனிவரிடம் கூறினான். உடனே முனிவர் அவன் மீதுகடும் சீற்றங்கொண்டு ''மூடனே நீ என்ன காரியம் செய்து விட்டாய், உனக்கு முருக நாமத்தின் பெருமை தெரியுமா? மலையளவு பஞ்சுக்குவியலைக் கொளுத்துவதற்கு ஒரு தீக்குச்சி போதாதா? மூன்று தீக்குச்சிகளா வேண்டும்? முருகா என்று ஒரு முறைசொன்னால்கோடி பிரம்மஹத்திதோஷம் தீருமேஒருபிரம்மஹத்தியைப்போக்க மூன்றுமுறை முருகா, என்று கூற வேண்டுமா? முருக நாமத்தின் மகிமையை அறியாத நீ வேடனாகப் பிறக்கக் கடவாய்'' என்று சாபமிட்டார்.

முனிவரின் மகன் நடுநடுங்கித் தந்தையைவணங்க, அவர் மனம் இரங்கி '' நீ கங்கைக் கரையில் வேடர் குலத்தலைவனாகப் பிறந்து, முருகனுடைய நாமங்களில் ஒன்றான குகன் என்ற பெயருடன் விளங்குவாய், இராமனுடைய நண்பனாக வாழ்ந்து முடிவில் முருகனுடைய திருவடிசேர்வாய்'' என்று அருள் புரிந்தார். அதன் படி குகன் என்றவேடனாகப் பிறந்தவனே முனிவரின் மகன் ஆவான். இவனே இராமாயணத்தில் நட்புக்கு இலக்கணமாக விளங்கிய குகன் ஆவான்.

மேலே கூறப்பெற்ற இக் கதையின் மூலம் '' முருகா '' என்ற இத் திருநாமத்தின் பெருமையையும் அதன் மகிமையையும் அதன் சக்தியையும் பற்றி உணரக்கூடியதாக இருக்கின்றது. எனவே நாமும் முருக நாமத்தை அனுதினமும் எமது சிந்தையில் இருத்தி உச்சாடணம் பண்ணி வருவோமேயாயின் நமது வினைகள் நீங்கி நற்பேறு பெற்று வாழப்பெறுவோம்.

உ

# ஒழுக்கம் உடைமை

நா. நல்லதம்பி

''அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின்நோய்
தம் நோய் போற் போற்றாக் கடை (குறள் 315)

என வள்ளுவர் வழிநின்று சிந்திக்க மறுக்கின்றான். தன்னைப் போல மற்றையோர்களையும் மதித்து நடக்கும் பக்குவம் ஒழுக்கத்தின் பாற்பட்டது.

வருங்கால உலகம் மாணவர் கையில் இருக்கிறது என்பதால் நாம் மாணவரின் ஒழுக்கம் பற்றியே அதிகம் சிந்திக்க வேண்டும்.

கல்வி அறிவு பெறுவதில், உலக அனுபவங்களைப் பெறுவதில் இன்றைய மாணவர்களுக்கு இருக்கின்ற வசதிகளும் வாய்ப்புக்களும் ஏராளமானவை.

இந்த வாய்ப்புக்கள், மாணவர்களது ஒழுக்க நெறிகளுக்கு இடையூறாக அல்லது தீய பழக்கங்களைப் பழகும்படி தூண்டுவனவாக அமையக் கூடிய சந்தர்ப்ப, சூழ்நிலைகளும் அதிகம் உண்டு.

பாடசாலை நேரமும் பெற்றோரின் கட்டுப்பாட்டிலுள்ள நேரமும் மிகச்சொற்ப நேரமாயிருக்க, தனியார் கல்வி நிறுவனங்களிலும் நண்பர்களின் கூட்டத்திலும் வாழும் நேரம் கூடுதலாக இருப்பது மாணவர்களின் தன்னிச்சையான போக்குக்கு வழி வகுத்துவிடும்:

அப்பொழுது அவர்கள் மிகுந்த சுயகட்டுப்பாட்டுடன், எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

அதுவும் இன்றைய காலகட்டத்திலே, எது நடந்தாலும் ஏனோ தானோ என்று இருக்கின்ற அரசாங்கத்தையோ அல்லது பாதுகாவலர்களையோ நம்பி நடக்க இயலாது.

அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பார்கள். அரச நீதிக்கே அறங்கூறும் அமைச்சர்கள் இல்லாத நிலை இன்று இருக்கும் பொழுது, நமக்கு நாமே பாதுகாப்புத்தேட வேண்டியதே நல்லது.

அத்துடன் மற்றவர்களுடைய சுதந்திரத்தில் நாம் கைவைக்க முற்படவும் கூடாது.

✶ இன்று என்பது நம்பிக்கையின் வசம்: ✶

பிரயாணத்தின் போது அல்லது பிரார்த்தனையின் போது அல்லது பாடசாலை நேரத்தில் - எப்பொழுதாயினும் நாம் சுயகட்டுப் பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இதனால், ஒவ்வொரு மாணவனும் தனது ஒழுக்கத்தைத் தானே வகுத்துக்கொள்ள உதவும்.

தன்னால் மற்றவர்களுக்கு இடையூறு வரக்கூடாது என்பதில் நாம் விழிப்பாய் இருப்பதுதானே ஒழுக்கம் என்பது!

உயிரினும் மேலாக ஒழுக்கம் பேணப்பட வேண்டும் என வள்ளுவர் சொன்னார்! அது ஒன்றும் பெரிய விடயமல்லவே!

மற்றவர்கள் எங்களைப்பார்த்து, முறைத்துப்பார்க்க விடாமல் இவனல்லவா பிள்ளை! இவன் யார் பிள்ளை? எந்தப் பாடசாலையிற் படிக்கிறான்? என்று மற்றவர்கள் வியந்து பாராட்டும்படி நடப்பது தானே ஒழுக்கம் என்பது!

பொய், களவு, பிறர் பொருளில் ஆசைப்படுதல், மதுஉண்ணுதல், மாமிசம் உண்ணுதல் ஆகிய பஞ்சமாபாதகங்களில் ஈடுபடாமல் வாழ்வதும்,

உண்மை பேசுதல், எல்லோருடனும் எப்பொழுதும் இன்சொற் பேசுதல், ஏழைகளுக்கு உதவுதல், செய்ந்நன்றி மறவாமல் இருத்தல் தாய்தந்தையர் மற்றும் பெரியோரைக் கனம் பண்ணுதல் ஆகிய நல்ல குணமுள்ளவர்களாக இருப்பதும்,

நல்ல நூல்களைச் சிறந்த முறையிற் கற்றலும், கற்றறிந்த நல்ல வழிகளில் ஒழுகுவதும், ஆலய வழிபாடு செய்தலும்.

நன்மாணாக்கர்களின் கடமையாக இருக்க வேண்டும். மேலும்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே. அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று. என்னும்

ஒளவையின் அறிவுரைகள் நமது நல்லொழுக்க வாழ்வுக்குத் துணையாக இருக்கின்றன.

மிகவும் தொன்மையான தமிழ்மொழியிலே. ஏராளமான இலக்கிய நூல்களும் இதிகாச நூல்களும் இருக்கின்றன.

இவைகள் எல்லாம் பழந்தமிழர்களின் அறநெறி வாழ்க்கை முறைகளையும் கலை, பண்பாடு, கலாச்சாரங்களையும் நமக்கு எடுத்துக்கூறுபவையாக இருக்கின்றன.

அவைகளின் வழிவந்த இன்றைய தமிழ் மக்களின் வாழ்க்கை முறையில் ஒழுக்கம் சீர்குலைந்து காணப்படுகின்றது.

இதற்கு, இங்குள்ள மக்கள் மேலைத்தேசங்களுக்குப் புலம் பெயர்ந்து சென்று. அங்குள்ள மக்களின் கலாச்சாரங்களைப் பழகியமையால் ஏற்பட்ட தாக்கமும்,

இனப்பிரச்சினையால் உண்டான போர்க்காலச் சூழ்நிலையும் காரணமாயிருக்கலாம்.

அல்லது சுயநலநோக்கங்கொண்ட அரசியல் வாதிகளின் கையிலே அதிகாரம் சென்றதனால், மக்களுடைய நல்வாழ்வு ஒழுக்கம் என்பன பற்றிய எண்ணக்கரு அவர்களிடத்தில் இல்லாத காரணமாயுமிருக்கலாம்.

எது எப்படியிருந்தாலும்,
தமிழன் என்றொரு இனம் உண்டு; தனியே
அவற்கொரு குணமுண்டு எனத்தலை நிமிர்ந்து
வாழ்ந்த தமிழ்மக்கள், தமது தனித்துவமான ஒழுக்கம் பண்பாடுகளைத் தமது உயிர்போல, உயிரினும் மேலாக மதித்து வாழ வேண்டும்.

மேலும், முற்காலத்திலே, பரந்துபட்ட இவ்வுலகில் வாழும் பல்லின மத வேறுபாடுடைய மக்களது நாகரிகம், ஒழுக்கமுறை எல்லாம் அந்தந்த நாட்டுடன் கட்டுண்டு காணப்பட்டன. ஆனால் இன்றைக்கு, உலகம், ஊடகங்களினாற் சுருக்கப்பட்டு ஒரு நகரம் போல ஆகிவிட்டது.

அதனால் ஒரு இடத்தில் நடந்த ஒரு சிறு சம்பவங்கூட எல்லா இடமும் எல்லோரும் அறிந்த விஷயமாகி விடுகிறது.

ஆகவே தான், இன்றைய நாகரிக உலகில், சைவத்தமிழர்களாகிய நாம், நமது கலாச்சார, பண்பாட்டு ஒழுக்க நெறிகளில் தவறாது ஒழுகி வாழ வேண்டியது அவசியமாகிறது.

பரிந்து ஓம்பிக் காக்க ஒழுக்கம்; தெரிந்து ஓம்பித்
தேரினும் அஃதே துணை. (குறள் 132)

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

## (மகாபாரதத்திலிருந்து)

## கர்னன் வதம்

சிவத்திரு வ. குமாரசாமிஐயர்

துச்சாதனனை வதம் செய்த போது அவன் தமக்கு இழைத்த அவமானத்தை நினைந்து நினைந்து உள்ளம் ஆவேசம் உற்று தொடர்ந்து துரியோதனனின் தம்பியர் ஒன்பதின்மரைக் கொன்றும் சீற்றம் தணியாத பீமனின் நிலைகண்டு கர்னன் உட்பட்ட அனைத்து படைவீரர்களும் கதிகலங்கி நின்ற வேளையில்ச் சல்லியன் கர்னனை ஊக்கப்படுத்தி உற்சாகமூட்டும் வார்த்தைகளைக் கூறலானான். ''கர்னா துச்சாதனன் வதம் செய்யப்பட்டதனால் துரியோதனன் மயங்கிய நிலையினை அடைந்து மீண்டெழுந்துள்ளான். உன்னை ஒருவனையே அவன் முழுதும் நம்பிய நிலையில் உள்ளான். இந்நிலையில் நீ அச்சமடைந்து சோர்வடையலாமா? எனவே உற்சாகத்துடன் போரிடுவாயாக'' கர்னனுக்கு எடுத்துரைத்தான்.

அப்பொழுது அர்ச்சுனன், கர்னன் சோர்வடைந்து காணப்பட்ட நிலைகண்டு அவனைத் தாக்க முற்பட்டான். அர்ச்சுனன் கர்னனைநோக்கிக் ''கர்னா என் புதல்வன் அபிமன்யுவைப் பலர் நீங்கள் ஒன்று கூடிச் சிறுவனான அவனை மாய்த்தீர்கள். இதோபார் உன்புதல்வன்விருஷசேனனை நான் கொன்றொழிக்கப் போகிறேன். ஆற்றல் மிக்க நீங்கள் காப்பாற்றுங்கள்'' என்று கூறியவனாய்க் கர்னன் புதல்வன் மீது கணைகளைத் தொடுத்து அவனை வதம் செய்தான். தன்புதல்வன் மாண்டதினைக்கண்ட கர்னன் கோபாவேசமுற்றவனாய் அர்ச்சுனனைப் பலமாகத் தாக்கத் தொடங்கினான்.

கர்னனும் அர்ச்சுனனும் கடுமையாகப் போரிட்டனர். சமமான ஆற்றல் மிக்க இருவரும் உக்கிரமாகப் போரிலீடுபட்டமையால் ஒருசமயம் அர்ச்சுனன் கைஓங்கியது. மறுகணம் கர்னன் கைஓங்கியது. அனைவரும் வியப்புடன் அவர்களின் போரின் போக்கினை கவனித்துக் கொண்டிருந்தனர் இவ்வேளையில் அசுவத்தாமன் துரியோதனனை

பொறுமை முன்னேற்றத்திற்கு முதற்படி.

அணுகி, ''வேந்தனே பாண்டவர்களுடன் சமாதானமாகிப் போரை இத்துடன் நிறுத்து. வீணான உயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தவிர வேறு பலன் ஏதும் கிட்டியதா? குருவை இழந்தாய் பெரும் வீரரான பிதாமகர் பீஷ்மரை இழந்தாய். இந்நிலை எனக்கும் கிருபாச்சாரியாருக்கும் ஏற்படப்போகிறது நீயும் உனது உயிரைக் காப்பாற்றிக் கொள். உயிர் இருந்தால்தானே எதனையும் ஆண்டனுபவிக்கலாம். இறந்த பின் எதனை அனுபவிப்பாய்? நான் சொல்வதனை ஏற்றுக் கொள். கருணையும் தர்மமும் நிறைந்த உள்ளம் கொண்டவனாகிய யுதிஷ்டிரர் என் சொல்லை ஏற்றுக்கொள்வான். யுதிஷ்டிரர் உரைகளை அவன் தம்பியர் சிரமேல் ஏற்று நடப்பர். அர்ச்சுனனைக் கர்னனாற் வெல்லவே முடியாது. ஆகவே யுத்தத்தை நிறுத்தி சமாதான வழியிற் செல்வாயாக'' என்று யோசனை கூறலானான் ''விநாசகாலே விபரீத புத்தி'' என்பதற்கமைய அசுவத்தாமன் எடுத்துக் கூறிய அறிவுரைகள் செவிடன் காதில் ஊதிய சங்காயின. துரியோதனன் மீண்டும் படை வீரர்களை போரிலே ஈடுபடுமாறு கட்டளையிட்டான். போர் உக்கிரமாக நடை பெறலாயிற்று.

கர்னனை அர்ச்சுனன் அதிவேகமாகத் தாக்கிய வேளையிலும் கர்னனின் ஆற்றல் மிகைபடஇருப்பது போல்த்தோன்றியதனால் பீமனும், கண்ணபிரானும் அர்ச்சுனனை உற்சாகப்படுத்தி ஊக்கமளித்த வண்ணம் இருந்தனர். கர்னன் போர் வெறிமிக்கவனாய் பாணங்களை அளவற்ற எண்ணிக்கையிற் தொடுத்தான். இதனால் அர்ச்சுனனின் தேர்சாரதியாக விளங்கிய கண்ணபிரானின் கவசம் உடைந்தது. இதனாற் சீற்றம் அடைந்த அர்ச்சுனன் அளவற்ற கணைகளை அடுக்கடுக்காகத் தொடுத்து கர்னனைப்படுகாயப் படுத்தினான். இதனால் வெஞ்சினமடைந்த கர்னன்நாகாஸ்திரத்தைக் அர்ச்சுனன் மீது ஏவினான் நாகாஸ்திரத்தை ஏவமுற்பட்ட வேளை சல்லியன் கர்னனை நோக்கிக் ''கர்னா எதிரியின் கரத்தைக் குறிவைத்து நாகாஸ்திரத்தை ஏவு'' என்றான். இதனால் வெகுண்ட கர்னன் ''குறி வைப்பது குறித்து எனக்குக் கூற வேண்டாம் '' என்று கர்வமாகப் பதிலளித்தான்.

கர்னன் ஏவிய நாகாஸ்திரம் பிரகாசித்த வண்ணம் உக்கிரமாக அர்ச்சுனனை நோக்கி வேகமாக வருவதனைக் கவனித்தார் வாசுதேவர். நாகாஸ்திரத்தின் கொடூரத்திலிருந்து அர்ச்சுனனைக் காப்பாற்றும் திருவுளம் கொண்ட கண்ணபரமாத்மா கர்னன் வைத்த இலக்கைத் தவறச் செய்யும் நோக்குடன்

தேரைத் தமது காற்பெருவிர லால் அழுத்தி பூமியில் தாழும் படி செய்தார். இதனால்ச் சீறிப் பாய்ந்து வந்தநாகாஸ்திரம் அர்ச் சுனனின் கழுத்தைத் தாக்காது கீரீடத்தைப் பறித்துச்சென்றது. தான் வைத்த குறி தவறியது கண்டு துணுக்குற்ற கர்னன், அர்ச்சுனனின் தேர் பூமியில் பதிந்தமையாலும்கீரீடம்இழந்து அர்ச்சுனன் நிற்பதும் கண்டுஉரக் கச் சிரித்தவனாய் வேறு பாணங் களை ஏவி அர்ச்சுனனைப் படு காயமடையச் செய்தான். இத னால் ஆவேசமடைந்த அர்ச்சு னன் தனது காண்டீபம் எனும் வில்லை எடுத்துச் சரமாரியாகப் பாணங்களைத் தொடுத்துக் கர் னனின் கீரீடத்தைக் கீழே வீழ்த் தினான் கவசத்தை உடைத் தான். இதன் மேலும் அம்பு களைத் தொடர்ந்து செலுத்திக் கர்னனை மூர்ச்சை அடையச் செய்தான் தேரின் கைப்பிடியின் மீது துவண்டு சோர்ந்து வீழ்ந் தான் கர்னன். இந்நிலையில் யுத்த தர்மத்தை மீற விரும் பாத அர்ச்சுனன் அம்புகள் தொடுப்பதனை சற்றே நிறுத்த அதனைக் கவனித்த வாசுதேவர் ''அர்ச்சுனா தாமதியாமல் இவ்வேளையில்க் கர்னனைத் தொடர்ந்து தாக்கி வதம்செய்' என்று ஊக்கப்படுத்தலானார். கண்ணனின் உரைகளைச் செவி மடுத்த அர்ச்சுனன் தொடர்ந்து தாக்கத் தொடங்கிய வேளை கர்னனின் தேர்ச்சக்கரம் ஒன்று பூமியினுள் புதைந்தது. (இதுவும் கர்னனுக்குக் கிடைத்த சாபத்தி னால் நடந்தது) தேர்ச்சக்கரம் பூமியுள் புதைந்தமை கண்ட கர் னன் அதனைச் சரிசெய்ய முயன்று அர்ச்சுனனை நோக்கி ''அர்ச்சுனா போரின் தர்ம, நெறி முறைகளை நன்குணர்ந்த நீ சற்றுப் பொறுத்திருப்பாயாக. நான் தேரின் சக்கரங்களை சரி செய்த பின் போரினைத் தொடர்ந்து நடாத்துவோம்'' என்று கூறலானான்.

(தொடரும் ...

## பெரியோரைப் பற்றிக்கொள்

பலமற்ற கொடியானது உயர்ந்த மரத்தைச் சுற்றிக் கொண்டு வானம் வரை உயர்கிறது. மரத்தைப் பற்றிக்கொள்ளவில்லை என் றால் மண்ணில் படர்ந்து காலினால் மிதிபடுகின்றது. கல்லைத் தண்ணீரில் போட்டால் மூழ்கி விடுகிறது. அதே கல்லை கட்டை யால் செய்யப்பட்ட படகின் மேல் வைத்தால் மிதந்து செல்கிறது அதைப்போல நம்மைவிட அறிவிலும், ஆற்றலிலும் பெரியோர் களைப் பற்றிக் கொண்டால் நாமும் உயர்வடையலாம்.

★ அறிவு தெளிவு பெற வைக்கிறது. ★

# ஔவையார் அருளிச்செய்த நல்வழி

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல். [27]

ப - ரை : ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்று ஆகும் ஒரு பொருளைப் பெற நினைத்தால் அப்பொருள் கிடையாமல் வேறொரு பொருள் கிடைத்தாலும் கிடைக்கும், அன்று அது வரினும் வந்து எய்தும்-அப்படி அல்லாமல் அப்பொருளே வந்து கிடைத்தாலும் கிடைக்கும், ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும் - (இன்னும்) ஒரு பொருளை நினையாதிருக்குமுன்னே அது தானே வந்து நின்றாலும் நிற்கும், எனை ஆளும் ஈசன் செயல். (இவைகளெல்லாம்) என்னை ஆண்டருளும் கடவுளுடைய செய்கைகளாகும். எ - று

இ - ம் : இருவினைகளுக்கிடாக இன்பதுன்பங்களை ஊட்டும் கடவுளுடைய கருத்தின்படியேயன்றி ஆன்மாக்களுடைய கருத்தின்படி ஒன்றும் நடவாது எ - ம்.

உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைத் தெண்ணுவன - கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான். (28)

ப - ரை : கண் புதைந்த மாந்தர் அகக்கண் குருடாக இருக்கின்ற மனிதர், உண்பது நாழி - உண்பது ஒருநாழி அரிசி அன்னமேயாகும். உடுப்பது நான்கு முழம் - (அவர்) உடுப்பது நான்குமுழ வஸ்திரமேயாகும். (இப்படியாகவும்) நினைந்து எண்ணுவன எண்பதுகோடி, (அவர்) நினைத்து எண்ணுங் காரியங்களோ எண்பது கோடியாகும்- (ஆதலினால்) மண்ணின் கலம் போலச் சாம் துணையும் குடிவாழ்க்கை சஞ்சலமே - மட்பாத்திரம் அழிந்தாற்போல (அவர் சரீரம்) அழியும் வரையும் (அவருடைய) குடிவாழ்க்கையிலே துன்பமே விளையும் எ - று.

இ - ம் : உள்ளதே போதும் என்று திருப்தியடையாதவர் சாகும் வரை அடைவது துன்பமே அன்றிப் பிறிதில்லை எ - ம்.

★ வாழ்க்கை என்பது அடித்தல் அல்லது அடிபடுதல். ★

மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை - சுரந்தமுதம்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர். (29)

ப - ரை : மரம் பழுத்தால் - மரம் பழுத்திருந்தால், வா என்று வெளவாலை கூவி இரந்து அழைப்பார் அங்கு யாவரும் இல்லை - இப்பழத்தைத் தின்னுவதற்குவா என்று வெளவாலைக்கூவி வேண்டி அழைப்பவர் அம்மரத்தருகில் ஒருவரும் இல்லை, கன்று ஆ அமுதம் சுரந்து தரல்போல் கரவாது அளிப்பரேல் கன்றையுடைய பசுவானது பாலைச் சுரந்து கொடுத்தல் போல ஒளிக்காமற் கொடுப்பாராயின். உலகத்தவர் உற்றார் - ( அவ்வெளவால் போலத் தாமே வந்து ) எல்லோரும் உறவினராவார் எ - று

இ - ம் : கொடையாளருக்கு எல்லாரும் தாமே உறவினராவார் எ - ம்.

தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே - வேந்தே
ஒறுத்தாரை யென்செயலா மூரெல்லா மொன்றா
வெறுத்தாலும் போமோ விதி. (30)

ப - ரை : வேந்தே - அரசனே, முன் தாம் தாம் செய்த வினை - முற்பிறப்பிலே தாம் தாம் செய்துகொண்ட நல்வினை தீவினைகளை, பூந்தாமரையோன் பொறிவழியே தாமே அநுபவிப்பர் - தாமரைமலரில் இருக்கின்ற பிரமா விதித்தபடியே தாமே அனுபவிப்பார்கள். ஒறுத்தாரை என்செயலாம் - ( தீவினையினாலே தூண்டப்பட்டுத் ) தீங்கு செய்தவரை நாம் யாது செய்யலாம், ஊர் எல்லாம் ஒன்றாக வெறுத்தாலும் விதி போமோ - ஊரிலுள்ளார் எல்லாருந் ( துணையாகத் திரண்டு வெறுத்தாலும் விதிபோமோ போகாது ) எ - று

இ - ம் : தமக்கு ஒருவன் துன்பஞ் செய்யின், அது தாம் முன் செய்த தீவினைக்கீடாகக் கடவுளாலே தமக்குக் கிடைத்ததென்று அமைவதே அறிவு எ - ம் தொடரும்...

★ இன்று நாம் செய்யும் நன்மையே நாளைய இன்பம். ★

உ

[தொடர்ச்சி...

# யார் இந்த(ச்)செல்லம்மா?

சச்சிதானந்த ஆசிரமம்

மறுநாள் அதிகாலை மூன்று மணியளவில் சுவாமிகள் அம்மையாரின் வீட்டுப்படலையடியில் வந்து நின்று கூப்பிட்டார். அம்மையாரின் கணவர் அவரை வரவேற்றார். சுவாமிகள் ''என்ன சுவாமிமாரை இரும்புக் கட்டைகள் எண்டு நினைக்கிறியளோ? இந்த அமாவாசைஇருட்டிலை அங்கே இருக்கமுடியாமல் வெளிக்கிட்டுவாறன்'' என்று கூறி என்ன நடந்தது எனக் கேட்டார். அம்மையாரின் கணவர் நிலமையை விளக்கிக் கூறினார். அம்மாவும் உபதேச விடயம் கூறி, சந்தேகப்பட்டது நியாயமோ எனக்கேட்டார். சுவாமியும் உண்மை நிலையைக் கூறி உபதேசம் எதுவும் தான் செய்யவில்லை என்பதை அம்மையாரின் கணவனாரிற்கு தெரியப்படுத்தி இனிமேல் ஒற்றுமையாய் இருங்கோ என்று கூறிச் சென்றார்.

இது இவ்வாறிருக்க செல்லத்துரையின் மைத்துனர் சபாபதிப்பிள்ளை பொன்னம்பலம் என்பவரும் சுவாமியிடம் பேரன்பும் பெருமதிப்பும் உடையவராயிருந்தார். இதன் காரணமாக பொன்னம்பலம் என்பவர் சுவாமியை அடிக்கடி தமதில்லத்திற்கு அழைத்துச் சென்று உபசரிப்பது வழக்கமாக இருந்தது அதுமட்டுமல்ல, இருவரும் சேர்ந்து செல்லத்துரையின் வீட்டிற்கும் செல்வார்கள். இப்படியான வேளையில் செல்லத்துரை அவர்களின் மனத்திலும் ஓர் திருப்பம் ஏற்பட்டது.

அவர் தானும் சுவாமியைப் போலத் துறவு நிலையை அடைய வேண்டும் என நினைத்தது தான் அத்திருப்பம் அவர் அதற்கானமார்க்கத்தைச் சுவாமிகளிடம் கேட்டு அதனைச் செயற்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்று மைத்துனர் பொன்னம்பலத்தைக் கேட்டுக் கொண்டார். அவ்விருப்பத்தைப் பொன்னம்பலம் சுவாமிகளிடம் தெரிவித்தனர். சுவாமிகளும் அவர் விருப்பம் அவ்வாறாயின் நல்லவேளை பார்த்து அம்மன் சந்நிதியில் அவருக்கு குருவுபதேசம் செய்வோம் எனக்கூறி அதற்கான ஏற்பாடுகளைச் செய்

யுமாறு பொன்னம்பலத்திடம் கூறினார். ஏற்பாடுகள் அனைத்தும் முடிந்த நிலையில் உபதேசம் பெறும் பொருட்டு கோயிலுக்குச் செல்லும் வழியில் அம்மையாரினையும் சுவாமி தரிசனம் செய்வதற்கு கோயிலிற்கு வருமாறு கூறிச்சென்றார். அப்படியே அம்மையாரும் புனிதமுடையவராய் கோயிலுக்குச் சென்றார்.

அம்மையார் கோயிலுக்குச் சென்றதும் செல்லத்துரை அவர்கள் அம்மையாரிடம் தாம் சுவாமிகளிடம் உபதேசம் பெற்று விட்டதாகவும் இருவரும் ஒரேவழியைப் பின்பற்றுவதானால் அம்மையாரும்சுவாமியிடம் உபதேசம் பெறவேண்டும் எனவும் எடுத்துரைத்தார். அம்மையாரும் கணவரின் விருப்பப்படி செய்வதாகக் கூறினார். அவ்விடயம் சுவாமிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. சுவாமிகளும் மிகுந்த உவகையுடனும் ஆனந்தத்துடனும் அதற்கு உடன்பட்டார்.

பன்றித்தலைச்சி அம்மன் ஆலய மகாமண்டப சந்நிதானத்தில் சுவாமிகளும் அம்மையாரும் எதிரும் புதிருமாக அமர்ந்து கொண்டனர். சுவாமிகள் அம்மையாரிடம் அம்மா நீ உலக வாழ்வில் மேலும் சீரும் சிறப்பும் செல்வமும் பெறப் போகிறாயோ? அல்லது இறைவனது பாதத்தை அடையப் போகிறாயோ?என வினவினார். இவ்விரண்டையும் வழங்கக்கூடியளவிற்கு சுவாமிகளிடம் தவவலிமை இருந்தது. அம்மையாரின் உறுதித் தன்மையைப் பரிசோதிக்க வேண்டி சுவாமிகள் இவ்வாறு வினவினார். அம்மையாரோ இது விடயத்தில் மிகவும் உறுதியாகவிருந்தார். அவர் சுவாமிகளிடம் ''சுவாமி எனக்குப் பொருள் பணம் எதுவும் வேண்டாம், இறைவனை அடைந்தால் அதுவே எனக்குப் போதும்'' என உறுதியுடன் கூறினார். அம்மையாரின் உறுதி கண்டு சுவாமிகள் மனமிக மகிழ்ந்தார்.

சுவாமிகள் தீட்சை வழங்க ஆயத்தமானார். அம்மையாரிடம் ''உனக்குத் தாயாக தந்தையாக குரு நாதனாக நின்று உன்னை ஆட்கொள்ளும் எனக்கு உன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஒப்புக்கொடு'' எனக்கூறினார். அம்மையாரும் அவரின் கையில் இவை அனைத்தையும் மானசீகமாய் ஒப்படைத்தார் இதன்பின் சுவாமிகள் அம்மையாரிற்கு மந்திரோபதேசமும் திருவடி தீட்சையும் வழங்கினார்.

(தொடரும்......

★ இரண்டு நிமிடங்களாயினும் கடவுளை நினை. ★



உ

நமது காலத்து ஞானியாக வாழ்ந்தவர்

# திருவாசகம் சபாரத்தினம் சுவாமிகள்

இலங்கையில் பல ஞானியரும், சித்தர்களும் தோன்றியுள்ளனர். அவர்களுள் அண்மைக் காலத்தில் வாழ்ந்த ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் திருவாசகத்தையே தமது வாழ்வின் மூச்சாகக் கொண்டு விளங்கியவர் திருக்கேதீச்சரத்தில் மடம் அமைத்து, வந்த பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானமிட்டு மகிழ்ந்தவர் அத்தகையதொரு ஞானியை நாம் போற்றி நினைப்பது மிகவும் உயரிய காரியமாகும். ''

இவ்வாறு கடந்த 28-ஆம் திகதி காலை, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் நூற்றாண்டு ஜயந்தி விழாவிற் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்திய கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீ மத்சுவாமி ஆத்மகனாநந்தா குறிப்பிட்டார்கள்.

திருப்பணித்தவமணி சி. தியாகராசா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி விசேட பூஜை, தீபாராதனை கூட்டுப் பிரார்த்தனை என்பவற்றுடன் ஆரம்பமானது.

திரு தியாகராசா தமது தலைமையுரையில், ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள், திருவாசகத்தை மிகவும் ஈடுபாட்டுடன் ஓதி மகிழ்ந்த தன்மையையும், திருக்கேதீச்சரத்தில் இருந்து ஆற்றிய ஆன்மீகப்பணிகளையும் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்துசிறப்புரை நிகழ்த்திய திருகோணமலை ஸ்ரீமத் தந்திரதேவா சுவாமிகள் தமது உரையில்,

" நாம் தேவார திருவாசகங்களை நமது சிறார்களுக்கு ஓதுவித்துப் பழக்க வேண்டும் தொன்மையும் பெருமையும்மிக்க

இந்து சமயத்தைநன்குஉணர்ந்து செயற்பட வேண்டும். இந்து சமயம் மிகப்பெரும் சொத்து அதற்குள் நிறைய ஆன்மிகக் கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. எனவே எமது மக்களுக்கு அவற்றைப் பரப்புவது பிரதான கடமையாகும். பேதங்களை வளர்த்துக் கொள்ளாமல் ஒற்றுமையோடு செயற்படுதல் அவசியம்.

எனக்குறிப்பிட்டார்கள்.

கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள் தமது உரையில்

''நமது சமயம் சரியை, கிரியை' யோகம், ஞானம் என்ற நாற் பாதங்களைக் குறிப்பிடுகிறது. பெரும்பாலான மக்கள், சரியை கிரியை ஆகியபடிகளில் மட்டுமே நின்று விடுகின்றனர். அதன் அடுத்த படிகளுக்குச் செல்ல முயற்சிப்பதில்லை. நமது காலத்துச் சிரேஷ்ட முனிவராக விளங்கிய சபாரத்தினம் சுவாமிகள் யோகத்திலும், ஞானத்திலும் சிறந்து விளங்கினார்.

திருவாசகம் ஞானக்களஞ்சியம் அதன் உட்பொருள் வார்த்தைகளால் விளக்க முடியாதது. திருவாசகத்தை ஓதுவதை விட உணர்வது பிரதானமானது. அறிதல், உணர்தல், தெளிதல் என்ற படிகளை நாம் அடைய வேண்டும். அப்போதுதான் பிறவிப் பயனை அடைந்தவர்களாவோம்.

எனக்குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து நூற்றாண்டு ஜயந்தி விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட பக்திமலர்'' நூல் வெளியீடு இடம்பெற்றது. முதற்பிரதியைப் புறக்கோட்டை வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ். பி. சாமி அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

சிறப்பு நிகழ்ச்சியாக திருவாசகம் தொண்டர் சபையின் செயலாளரும், சமூகத்தொண்டருமான திரு. த. துரைராசா தம்பதியினருக்குக் கௌரவம் வழங்கப்பட்டது. சியாமளா ஜீவல்லர்ஸ்அதிபர் திரு. சு. ஜெயவத்சனன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். திரு. சி. தியாகராஜா தம்பதியினர். திரு. வே. நீலகண்டன் தம்பதியினர் மற்றும் பலரும் துரைராசா தம்பதியினரை மலர் மாலை சூட்டிக் கௌரவித்தனர்

'பக்திமலர்' நூலைக் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள். இந்து சமய விவகார அமைச்சின் செயலாளர் திரு. ச. பரமேஸ்வரன் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. தில்லைநடராஜா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

பக்திமலர் நூலின் தொகுப்பாசிரியர் வாகீசகலாநிதி கனக சபாபதி நாகேஸ்வரன் அவர்களின் நன்றியுரையுடனும், தீபாராதனையுடனும் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

★ குறை என்பது மனத்தில்த்தான் உள்ளது ★

ஞானச்சுடர் மலருக்கு ஆக்கங்களை வழங்கிய செல்வி குணரத்தினம் மாலினிக்கு ஆசிரியர் ஆ.சிவநாதன் அவர்களால் பரிசு வழங்கும் நிகழ்வு.



ஞானச்சுடர் மலருக்கு ஆக்கங்களை வழங்கிய புத்தொளி ந.சிவபாதம் அவர்களுக்கு உதயன் பிரதம ஆசிரியர் கானமயில்நாதன் அவர்களால் கௌரவிக்கும் நிகழ்வு.



உ

[தொடர்ச்சி...

# பதிவலியில் அட்ட வீரட்டம் (எட்டு)

சு. இலங்கநாயகம்

அட்ட வீரட்ட ஈஸ்வரர்

## 5) திரிபுரம் எரித்தருளிய வரலாற்றின் தத்துவம் அறிதல்

தலம் - திருவதிகை
இறைவன் - வீரட்டேசுரர்
இறைவி - திரிபுரசுந்தரி

''அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே'' -343

அதாவது கங்கையை அணிந்த சிவந்த சடையினை உடையவனும் அனைத்திற்கும் தொல்லோனுமாகிய பெருமான், முப்புரங்களையும் அழித்தார் என்று மூடர்கள் சொல்வார்கள். முப்புரம் மூன்று மலங்களின் காரியமாய் அமைந்தது. இறைவன் மலங்களையும் எய்து வீழ்த்தியதை அறிவார் எவரும் இல்லை என்ற படி.

## 6) இறைவன் யானையை உரித்து போர்த்தியதை உணர்த்தும் வரலாறு

தலம் - வழுவூர்
இறைவன் - வடமூலநாதர்
இறைவி - அருந்தவநாயகி

''முத்தீ கொளுவி முழங் கெரி வேள்வியுள்
அத்தி உரி அரன் ஆவது அறிகிலர்
சத்தி கருதிய தாம் பல தேவரும்
அத்தீயின் உள்ளெழுந்து அன்று கொலையே'' -344

அதாவது முத்தீயினை எழுப்பி முனிவர்கள் செய்த முழங்குகின்ற எரியினையுடைய யாகத்தில் எழுந்த யானையின் தோல் சிவபெருமானுக்கு ஆவதை யாவரும் அறிந்திலர், தங்கள் வன்மையே

பெரிதென்று கருதிய தேவர்கள் பலரும் எண்ணியது போல் அந்த வேள்வித் தீயுள், கொலையாகிய அபிசாரம் எழுந்தது அன்று என்றவாறு.

### 7) எம சங்காரம் நடந்த இடம் - அதாவது காலனை வென்ற தத்துவம் உணர்தல்

தலம் - திருக்கடவூர்
இறைவன் - அமிர்தகடேசுவரர்
இறைவி - அபிராமி அம்மை

''மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கி முற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே'' -345

அதாவது மூலாதாரத்து மூண்டெழுகின்ற சோதியாகிய தலைவனைப் பிரம்ம மந்திரமாகிய மேலைத் துவாரத்துக்கு மேல் பன்னிரண்டு அங்குலம் உயரத்துள் தரிசித்துப் பிராணனாகிய முதற் காற்றையும் நிறுத்தி, யமனை வென்று அந்த மேலைத் தலத்திலேயே ஆன்மாவாகிய மார்க்கண்டேயரும் சிவமும் சேர்ந்து உலகத்தில் கடவூர் என்னும் தலத்துள் நலம் பொருந்த இருந்த உண்மை இதுவாகும்.

### 8) மன்மதனைத் தகனம் செய்த தத்துவம உணர்த்தியது

தலம் திருக்குறுக்கை (திருக்கொறுக்கை)
இறைவன் - வீரட்டேஸ்வரர்
இறைவி - ஞானாம்பிகை

''இந்த மனத்தை இசைய இருத்திப்
பொருந்திய இலிங்க வழியது போக்கித்
திருத்திய காமன் செயலழித் தங்கன்
அருந்தவயோகம் கொறுக்கை அமர்ந்ததே'' -346

இறைவன் திருவடிக்கண்ணே வைத்த மனத்தை அங்கேயே அசையாமல் என்றும் இசைய இருத்தி, இலக்கின் வழியே பொருந்தி மேற்போகச் செய்து திருத்தமுற்ற மன்மதன் செயலாகின்ற இச்சைகளனைத்தையும் அழித்தமையே சிவபெருமான் யாரும் செய்தற்கரிய தவயோகமாகக் கொறுக்கைத் தலத்தில் விரும்பிச் செய்தது என்றவாறு.

குருடனுக்கு குருடன் வழிகாட்ட முடியுமா?

ஜகத்தில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் படிமுறை வளர்ச்சியடைந்து ஈற்றில் இறைவனையடைகின்றன அதாவது சீவன் சிவன் ஆகின்றது இதனையே புல்லிலிருந்து தேவர்கள் வரையான வளர்ச்சியைச் சிவபுராணத்தில் மணிவாசகப் பெருந்தகை குறிப்பிடுகின்றார் டாவினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடும் இதனையே குறிப்பிடுகின்றது இவற்றையே

''தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்'' - என்கிறார் உமாபதி சிவாச்சாரியார்.

எனவே சைவ சித்தாந்தக் கோட்பாட்டுக்கு இணங்கச் சிவன் சீவனுடன் உடனாய் ஒன்றாய், வேறாய் ஆகிய மூன்று நிலைகளில் நின்று - ஆன்மாக்களை ஆட்கொள்ளும் வகையினையே அட்டவீரட்டம் அறிவுறுத்துகின்றது

## வாசகர் உள்ளத்திலிருந்து

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் அரிய அற்புதங்கள் நிறைந்த கலைப்பொக்கிஷமாம் ''ஞானச்சுடர்'' அன்பு அதிபர் கணேசதாஸன் ஐயா அவர்களின் வழிகாட்டலின் மூலம் எமக்கு தவறாமல் கிடைத்து வருகின்றது. ஒவ்வொரு தடவையும் இப்புத்தகத்தை தொடும்போதும், சந்நிதியான் எம்மனக் கண்ணில் நிறைந்து விடுவார். அதைவிட எம்சொந்த மண்ணில் இருப்பது போன்ற உணர்வும் ஏற்படும் ''ஞானச்சுடர்'' வந்தவுடன் அப்பாவும் அம்மாவும் கண்ணில் ஒற்றி, இன்று நினைக்க முருகன் வந்துவிட்டார் என்று பரவசப்பட்டு, புத்தகம் முழுக்க வாசித்து முடித்து விடுவார்கள்.

அதைவிட நாமும் பல்கலைக்கழகத்தால் வந்தவுடன் எமக்கும் அதைவாசியுங்கள், இதைவாசியுங்கள் என்று சிலகட்டுரைகளை எடுத்துத் தருவார்கள். இவ்வகையில் நாம் பிறநாட்டில் வாழ்ந்தாலும் எமது சைவசமய கோட்பாடுகளிலிருந்து வழுவாது நடப்பதற்கும், இறைநம்பிக்கையை ஊட்டுவதற்கும் இம்மலர் ஊன்றுகோலாக உள்ளது என்பதை மனமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செல்வி தனகௌரி ஜவகர்லால் நேரு கனடா**

உ [தொடர்ச்சி...

# பாவியென்ற நாமம் படையாதே

- முருகவே பரமநாதன்

பாவியென்ற நாமம் படையாதே - பாவச் செயல்களைச் செய்யாதே என்றபடி, செல்வச் செருக்கு முதலியன பிறவிவாய்ப்படுத்துவன ஆதலான் "மேனிய சீர்வித்தாரமுங் கடம்பும் வேண்டாம்" என்றார். செத்த பிணம் செயலின்றிக் கிடப்பது போலச் செயலின்றிக் கிடப்பதே ஞான நெறியாம். என்னை திரிகரணமாகிய மனம் வாக்கு காயத்தின் செயல்களே மறுபிறப்புக்குக் காரணம் ஆதலின் செயலின்றிக் கிடத்தல் - கருவி கரணங்கள் ஒய்ந்து கிடத்தல்.

பட்டினத்தார் பாடல் திருவிக விருத்தியுரை பக். 158 பிறர் பழி தூற்றாமல் நாம் வாழ வேண்டும். எம்மையறியாமலேனும் பிறர்க்குத் தீங்கு எண்ணினாலும், செய்தாலும் அறம் அவனைத் தண்டிக்கும் என்பது வள்ளுவர் வாய் மொழி.

" மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுந் சூழ்ந்தவன் கேடு" திருக்குறள் 24

கெடுவான் கேடு நினைப்பான் என்பது பழமொழி. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இப்பழி பற்றிப் பேசும் போது தன்னை அரும் பாதகன், பொய்யன், காமுகன், கள்வன் என்று குறிப்பிடுகின்றார். செய்ய வேண்டிய கொடுமைகளையெல்லாம் செய்து விட்டுத்தம்மை வெள்ளையெனக் காட்டும் இப்பூப்பந்தில் நல்லவர்கள் தம்மை இனங்காட்டாமல் மறைந்து வாழ்கிறார்கள் ஏன்? எனவே அவப் பெயரில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வோம்.

" அரும்பாதகன் பொய்யன் காமுகன் கள்வன் அருள்சிறிதும்
அரும்பாத கல்நெஞ்சன் அறாச்சினத்தன் அவாவின் நின்றும்
திரும்பாத கன்மத்தன் ஆனேற்கு சேமச்சிலம்பு அமர்ந்து
அதிரும் பாதகஞ்சம் தரின் அதுதான் நின்திருவருளே"

அஷ்டப்பிரபந்தம்

சினம் - கோபம், அவா - ஆசை, பாதகஞ்சம் - பாதமலர் சேமச்சிலம்பு - திருமலை. இப்பாசுரம் நமக்கு நல்ல அறிவுறுத்தலாகும். எத்தனை விழுக்காடு நாம் நல்ல பண்புகள் உள்ளவர்களாக

நமது பாவங்கள் நம்மைத் தண்டிக்கின்றன.

வாழ்கிறோம். எத்தனை விதம் தீய குணங்களை வளர்க்கிறோம் என்பதை உரைத்துப் பார்த்து நம்மை நாமே நல்வழிப்படுத்த வேண்டும். எனவே எம்பெருமை, குடும்ப மேன்மை, சமுதாய விழு மியங்களைக் கருத்திற்கொண்டு நம் வாழ்வை வழிநடாத்த வேண்டும்.

"தான் பிறந்த இல் நினைந்து, தன்னைக் கடைப்பிடித்துத்
தான் பிறராற் கருதற் பாடுணர்ந்து, தான் பிறரால்
சாவ வென வாழான் வாழ்கவென வாழ்தல் நன்று"

பிறர் நம்மைப் பார்த்து இவன் நீண்டகாலம் வாழ வேண் டும் என்று வாழ்த்தக் கூடியதாக நம் வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும். இவன் தொலைந்து போகட்டும் என்ற அவச்சொல்லில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வோம். கருவிலே திருவுடை யோர் பாக்கிய சாலிகள். பிள்ளைகள் கூடப்பழி பிறங்கா மக்களாய் அமைதல் வேண்டும்.

"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்" குறள் 62

பழிபிறங்கா மக்கள் - பிறராற் பழிக்கப்படாத நற்குணங்களை உடைய பிள்ளைகள். எனவே தான் பட்டினத்தடிகள் அறப்பண்பு களை மேற்கொள்ளுங்கள் என அழுத்திக் கூறுகின்றார்.

"கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதல ரோடிணங் காமற் கனவினும் பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந்தருவாய் சிதம்பரதேசிகனே"

பட்டினத்தார் பாடல் திருத்தில்லை 4

சிதம்பரத்திலே வீற்றிருக்கும் சிவகுருநாதனே! உயிர்களைக் கொல்லாமலும், கொன்றவற்றை உண்ணாமலும், வஞ்சகம், கோள், களவு முதலியவற்றைக் கற்றுக்கொள்ளாமலும், வஞ்சகருடன் சேரா மலும், சொப்பனத்திலேனும் மறந்தும், பொய் பேசாமலும், பொய்ச்சொற்களுக்குச் செவி கொடுக்காமலும், மயில் போன்ற சாயலை உடைய மாதர்கள் மாய வலையிற் சிக்காமலும் இருக்கத் திருவருட் செல்வத்தைக் கொடுத்தருள்வாயாக.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி
எல்லா உயிரும் தொழும்" என்பது வள்ளுவர் வாய்மொழி

உலகில் திருமாலை வணங்காமல் பாவகாரியம் செய்யும் பாவி களைப் பிரமன் எப்படிப் படைத்தான் எனப் பெரியாழ்வார் திருக் கோட்டியூர் நம்பியிடம் கேட்கிறார் இப்படி

நாவகாரியம் சொல்லிலாதவர்
நாபொறும் விருந்தோம்பு வார்
தேவகாரியம் செய்து வேதம்
பயின்று வாழ்திருக் கோட்டியூர்
மூவர்காரிய மும்திருத்தும்
முதல் வனைச்சிந்தியாத அப்
பாவகாரிக ளைப் படைத்தவன்
எங்ஙனம் படைத்தான் கொலோ.

பெரியாழ்வார் திருமொழி 4: 4: 1

பாரம்பரியமான சைவசமய ஒழுங்கு இம்மியும் தவறாமல் வாழ்ந்த முன்னோர் கட்டுப்பாடான அறவாழ்வு மேற்கொண்டனர் பழிபாவத்திற்குப் பயந்தனர். மனச்சாட்சியைக் கொல்லமாட்டார்கள். இன்றோ வெள்ளிக்கிழமை இரவு பன்னிரண்டு மணிக்குப்பின் மச்சம், மாமிசம் சாப்பிடலாம் என்னும் சமயக்காரன் - சிவதீட்சையும் பெறுவர். சிவதீட்சையும் அவர்க்குக் கொடுப்பர் எனவே பாவத்தின் அறப்பண்பைப் பின்வரும் பாடல் தெளிவு படுத்துகிறது சிந்திப்போம் சிறிது

காயா மரங்களிற் பூபிஞ் சறுத்தெனோ
கன்னியர்கள் பழி கொண்டெனோ
கடனென்று பொருள்பறித்தே வயிறெரித்தெனோ
கடுவழியில் முள்ளிட்டனோ
தாயா ருடற்குள் வரவென்ன வினை செய்தெனோ
தந்தபொருளை இலை யென்றுநான்
தானென்ற கர்வமொடு கொலை களவு செய்தெனோ
தபசிகளைப் யேசினேனோ
வாயார நின்று பலபொய் சொன்னெனோ வித்து
வாமிசரைவசை சொன்னேனோ
வந்தவரை மரியாதை செய்யாதடித்தெனோ
வழக்கி லோரஞ் சொன்னேனோ
ஈயாத லோபியே யானாலுமென் பிழைகள்
எல்லாம் பொறுத் தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே

நடராஜபத்து 80

★ ★ ★

உ

# மகான்களின் வாழ்வில் சில சுவையான சம்பவங்கள்

கு. நவரத்தினராஜா

சிறுவன் நரேந்திரன் சிறு வயது முதலே தியானஞ் செய்வதில் அதிக நாட்டமுடையவன். ஒரு நாள் சிறுவன் நரேந்திரன் பாடசாலைக்குச் சென்றிருந்தான் அப்போது பாடசாலையில் வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. சிறுவன் நரேந்திரனும் தன் வகுப்பில் போய் உட்கார்ந்து கொண்டிருந்தான். ஆசிரியர் மாணவர்களுக்குப் பாடங்களைப் போதித்துக் கொண்டிருந்தார். சிறுவன் நரேந்திரனோ கண்களை மூடிக்கொண்டு அப்படியே தியானத்தில் ஆழ்ந்துவிட்டான்.

வெகுநேரமாகியும் சிறுவன் நரேந்திரன் கண்களைத் திறப்பதாகக் காணவில்லை. இதைக் கவனித்த ஆசிரியர் சிறுவன் நரேந்திரனின் முதுகில் ஓங்கி ஒரு குத்து விட்டார். அப்போது சினமுற்ற நரேந்திரன் ஆசிரியர் போதித்த அத்தனை பாடங்களையும் ஒன்று விடாமல் ஒப்புவித்தான் தூங்கவில்லை என்பதை மெய்ப்பித்தான். இந்தச் சிறுவன் நரேந்திரன் யார் தெரியுமா? பிற்காலத்தில் அமெரிக்காவில் நடைபெற்ற உலக சைவ சமய மகாநாட்டில் ''என்னருமைச் சகோதர சகோதரிகளே !'' என்று கூறி அமெரிக்க நாட்டு மக்களின் உள்ளங்களையெல்லாம் தன்பால் ஈர்த்த சுவாமி விவேகானந்தரேயாவார்.

இவர் ஒரு நாள் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அப்போது இவர் இருந்த இருக்கைக்கு முன்பு உள்ள எதிர் இருக்கையில் ஒரு வெள்ளைக்காரன் அமர்ந்து பிரயாணஞ் செய்துகொண்டிருந்தான். சுவாமி விவேகானந்தரைப் பார்க்கும் போது, அவர் ஒரு பரதேசி போலத் தோற்றமளித்தார். அப்போது வெள்ளைக்காரன் தான் உண்பதற்குத்தேவையான பால், பழம், றொட்டி முதலானவற்றை உண்டு கொண்டிருந்தான். சுவாமிகளைப் பார்க்க அவனுக்குப் பெரும் நகைப்பாயிருந்தது. சுவாமிகள் மௌனமாகவேதான் இருக்கையில் அமர்ந்திருந்தார். அப்போது அங்கு ஓர் அதிசயம்நிகழ்ந்தது அடுத்தபுகையிரத நிலையத்தில் லட்டு,ஜிலேபி பூந்திவிற்பவன் ஒருவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அப்

★ கல்வியின் பயன் அறிவும், பணிவுமாகும். ★

போது ஸ்ரீராமபிரான் அவனுடைய சொப்பனத்தில் தோன்றி, ரயில் வண்டியில் ஒரு துறவி வருகிறார் என்றும் அவருக்கு லட்டு, ஜிலேபி, பூந்தி, பால் கொடுத்து உபசரிக்கும்படி கூறி மறைந்தருளினார்.

அவ்வாறே அவனும் சுவாமிகள் இருந்த ரயில் பெட்டி நோக்கிச் சென்று, அவரை வணங்கி, தான் கண்ட கனவைக் கூறி, சுவாமிகளை உபசரித்தான். அதைக் கண்ணுற்ற வெள்ளைக்காரன் தான் பரிகாசம் செய்ததை உணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கோரினான்.

சிறுவன் கதாதரன் சிறுவயதில் குளத்துக்குக் குளிக்கச் செல்வது வழக்கம் சிறுவன் கதாதரன் குளத்தில் குளிக்கச் சென்ற போது சில குறும்புத் தனங்களையும் செய்வானாம் பெண்கள் குளிக்கும் படித்துறைக்குச் சென்று தானும் தன் நண்பர்களுடன் கும்மாளமிடுவானாம் ஒருநாள் அங்குவந்த பெண்கள் சிறுவன் கதாதரனைப் பார்த்து ''நீ பெண்கள் குளிக்கும் இடத்திற்கு வரவேகூடாது ஆண்கள் குளிக்கும் பக்கம் சென்று குளி'' என்றுகூறினார்களாம். சிறுவன் கதாதரனும் விடுவதாக இல்லை ''ஏன் பெண்கள் குளிக்கும் பக்கம் குளிக்கக்கூடாது?'' என்று கேட்டானாம் இந்தக் கண்டிப்பு அவன் மனத்தை மிகவும் உறுத்தியபடியே இருந்தது.

ஒருநாள் பெண்கள் எல்லோரும் கூடி, சிறுவன் கதாதரனின் தாயாரிடம் சென்று அம்மா உங்கள் மகன் கதாதரன் பெண்கள் குளிக்கும் குளத்துப் படித்துறையில் தினமும் வந்து குளித்து குறும்புகள் செய்கின்றான். ஆனதினால் அவனை ஆண்கள் குளிக்கும் குளத்துப் படித்துறைக்குச் சென்று குளிக்கும்படி கூறவும். என்று கூறினார்கள்.

இதனால் மனம் வாடிய சிறுவன் கதாதரன் ஒரு நாள் தன் தாயாரிடம் ''பெண்கள் குளிக்கும்இடத்துக்குச்சிறுவர்கள் ஏன்செல்லக்கூடாது''என்றுகேட்டான். அதற்குத் தாயார் ''உன் போன்ற சிறுவர்கள் பெண்கள் குளிக்கும் குளத்துப்படித்துறைக்குச் செல்வது கூடாது. ஏன் எனில் அவர்கள் உனக்குத் தாய் போன்றவர்கள்'' என்று பதிலுரைத்தாள் இதனால் சிறுவன் கதாதரனின் மனத்தில் தோன்றிய ஐயம் தீர்ந்தது யார் இந்தச் சிறுவன் கதாதரன் தெரியுமா? இவர்தான் உலக மக்களை ஊக்குவிக்கும் பொருட்டு தோன்றிய அவதார புருஷன் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்.

சிறுமி சாரதை ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். ஆனால் பண்பட்ட அந்தணக் குடும்பத்தில் பிறந்தவர். நாட்டுப்புறத்தில்வள

ரும் மற்றைப் பெண் குழந்தைகளைப் போன்று, இளைய குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளுதல், மாடுகளைப் பேணுதல், வயலில் வேலை செய்யும் தந்தைக்கும், மற்றவர்களுக்கும் உணவு கொண்டு செல்லுதல் போன்ற வீட்டுக் காரியங்களில் இவருடைய சிறுமிப் பராயம் கழிந்தது. இவர் பள்ளி சென்று படித்ததில்லை. ஆனால் பிற்காலத்தில் தன் சொந்த முயற்சியால் வங்காளஎழுத்துக்களைக் கற்றுக்கொண்டு, சிறிது படிக்கவும் எழுதவும் அறிந்து கொண்டார். பக்தி மணம் கமழ்ந்த பண்பட்ட அந்தணர் குடும்பச்சூழலும் பிற்காலத்தில் கிடைத்த சாது சங்கமும், இயல்பிலேயே பண்பாடு மிக்க உயர்ந்த நிலையில் இருந்த சாரதைக்கு இயற்கையான கல்வியாக அமைந்தது. இத்தகைய பண்பாட்டுக் கல்வி ஏட்டுக் கல்வியை விடமிக உயர்ந்தது. யார் இந்தச்சிறுமி சாரதை தெரியுமா? இவர்தான் தூய அன்னை சாரதாதேவி.

ஒருமுறை அன்னை சாரதா தேவி கல்கத்தாவிற்குப் பயணம் செய்து கொண்டிருக்கும் பொழுது இருட்டுகின்ற சமயத்தில்சில கொள்ளைக்காரர்களைச் சந்திக்கும்படி நேர்ந்தது. அன்னையால் வேகமாக நடக்கமுடியவில்லை. அவருடன் வந்த கூட்டம் அன்னையை விட்டு விட்டு வேகமாக முன்னால் சென்று விட்டது. இருட்டுகின்ற நேரத்தில் மனிதர் எவரும் இல்லாத நடுக்காட்டில் அன்னை தனியாக விடப்பட்டார். அப்பொழுது கொள்ளைக்காரனும் அவனுடைய மனைவியும் அன்னை முன்பு வந்து அன்னையைத் தடுத்து நிறுத்தினர். இருபத்து நான்கே வயது நிரம்பப்பெற்ற இளமங்கையான அன்னை அந்த அபாயகரமான சூழ் நிலையில் மனத்தைரியத்தை இழக்கவில்லை. அவர்களை ''அப்பா'' என்றும் ''அம்மா'' என்றும் அன்பொழுக அழைத்தார். அன்னையின் குரல் அவர்களிடமிருந்து தாய்மைக் குணத்தை எழுப்பிற்று தான் தனித்து விடப்பட்டுள்ள அச்சூழ் நிலையைப் பற்றி அன்னை அவர்களிடம் விபரித்தார். இளம் பெண் ஒருத்தி தங்களிடம் கொண்ட பூரண நம்பிக்கையைக் கண்ட அந்தக் கொள்ளைக்காரத் தம்பதியினர் அன்னையிடம் மிகவும் அன்பாகவும் மென்மையாகவும்நடந்துகொண்டனர். அந்த இரவு அன்னையை நன்கு கவனித்துக் கொண்டதுடன் மறுநாள் அன்னையுடன் வந்த கூட்டத்தினருடன் அன்னையாரைச் சேர்த்து விட்டனர்

★ ★ ★

★ எதிர்பார்ப்பு அதிகமானால் ஏமாற்றமும் அதிகரிக்கும். ★

[தொடர்ச்சி...

## 17-02-2002 இல் இருந்து நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| வைத்தியநாதக்குருக்கள் மூலம் தி. சாரதா பொலிகண்டி | 1000 | 00 |
| து. குமாரதாஸ் கனடா | 10140 | ... |
| Dr. P. சிவபாலன் சந்நிதி வைத்தியசாலை கொழும்பு | 4000 | |
| ஆறுமுகம் குடும்பம் சாம்பியா | 25000 | ... |
| ஆறுமுகசாமி இராசா கொழும்பு | 10000 | ... |
| வனஜா இராமநாதன் நாயன்மார்க்கட்டு யாழ் | 1000 | ... |
| த. ந. பஞ்சாட்சரம் நீர்வேலி | 1100 | ... |
| வே. பாண்டியர் கைதடி தெற்கு | 1000 | ... |
| ந. குகசங்கர் வேல்பதி புத்தூர் | 1000 | |
| என். ஜெயக்குமார் லண்டன் | 8170 | ... |
| க. நடராசா வளலாய் மேற்கு அச்சுவேலி | 2000 | ... |
| பவானி சற்குணச்செல்வன் நெதர்லாந்து | 10000 | ... |
| சுப்பிரமணியம் குடும்பம் அரியாலை | 1000 | ... |
| ச. தருமலிங்கம் (மயிலிட்டி) பருத்தித்துறை | 2000 | ... |
| த. பத்மாசினி (இரத்தினம்) பிருந்தா உடுப்பிட்டி | 5000 | ... |
| தா. பாலசுப்பிரமணியம் கரணவாய் மத்தி கரவெட்டி | 2000 | |
| Dr. G. பவானி (மகப்பேற்று நிபுணர்) யாழ்ப்பாணம் | 10000 | |
| ஸ்ரீதேவி அரிசி ஆலை அச்சுவேலி | 1மூடை அரிசி | |
| சக்தி உரும்பராய் | 2 மூடை அரிசி | |
| Dr. வே. குகமூர்த்தி கந்தையா வளவு யாழ்ப்பாணம் | 1000 | ... |
| கு. வேலாயுதமூர்த்தி நாவலர் வீதி, யாழ்ப்பாணம் | 1000 | ... |
| திருமதி குணநாயகம் அம்மன் வீதி, திருநெல்வேலி | 1000 | ... |
| திருமதி வேலுப்பிள்ளை தொண்டைமானாறு | 6850 | ... |
| எஸ். சிவயோகநாதன் கோண்டாவில் | 1000 | ... |
| க. வரதராசன் மில்லேன் மல்லாகம் | 2000 | ... |
| செல்வி ச. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் யாழ் | 3000 | ... |
| கவிதா நிர்மலதாசன் தம்பசெட்டி | 1000 | ... |
| சுப்பிரமணியம் (இன்ஸ்பெக்டர்) தம்பசெட்டி | 1000 | ... |
| இ. தீபன் கரவெட்டி | 1000 | ... |
| பத்மநாதன் தேபாலன் கோண்டாவில் கிழக்கு | 40000 | ... |
| க. லக்ஷானி உடுப்பிட்டி | 1000 | ... |
| மு. கணேஸ் இணுவில் | 2 மூடை அரிசி | |

| | | |
|---|---|---|
| க. பதுமநிதி அச்சுவேலி | 1000 | ... |
| ச. பரமேஸ்வரன் அங்களப்பாய் இணுவில் கிழக்கு | 3000 | ... |
| தி. சண்முகராசா கரணவாய் | 2000 | ... |
| பொ. குலசேகரம் பருத்தித்துறை | 20000 | ... |
| கா. திலகவதி இணுவில் | 1 மூடை அரிசி | |
| திருமதி த வில்வநாதன் வண்ணார்பண்ணை யாழ் | 500 | ... |
| B. நிஷாந்தி கொழும்பு | 500 | ... |
| இ. தில்லை அச்சுவேலி | 2000 | ... |
| ஆ. யோகதாசன் பூதராஜர் கோவிலடி உரும்பராய் | 10மூடை அரிசி | |
| எஸ். சந்தரலிங்கம் (செல்வம்ஸ்) பூரணைதினத்தில் கே. கே. எஸ். வீதி, | 20000 | ... |
| நிரஞ்சன் தங்கராசா அல்வாய் | 1000 | ... |
| கந்தையா பாலகிருஸ்ணன் குரும்பசிட்டி புலோலி | 5000 | ... |
| வி. ஞானேஸ்வரன் ஏழாலை | 500 | ... |
| குழந்தவடிவேலு கற்கோவளம் | 500 | ... |
| நடனதேவன் ஜானகி அம்மா பருத்தித்துறை | 1000 | ... |
| திருமதி மயில்வாகனம் நவிண்டில் கரணவாய் | 2000 | ... |
| தி. இராஜேஸ்வரன் வடலியடைப்பு பண்டத்தரிப்பு | 1000 | ... |
| கணேசதாசன் சகிலா கனடா | 1000 | ... |
| த. தம்பிராசா இலையாணன் வடக்கு | 1000 | ... |
| சுசிலா நகைமாடம் பருத்தித்துறை | 2000 | ... |
| ஸ்ரீலலிதானந்த ஆச்சிரமம் ஆந்திரா இந்தியா | 20000 | ... |
| இ. விக்னேஸ்வர மூர்த்தி (A. O.) பருத்தித்துறை | 1000 | ... |
| p. அப்புத்துரை போதியமாவத்தை தெகிவளை | 2000 | ... |
| வே. இரத்தினசிங்கம் மந்துவில் | 500 | ... |
| திருமதி மீனாட்சிப்பிள்ளை நடராசா மந்துவில் | 500 | ... |
| திருமதி இராசரெத்தினம் பரமேஸ்வரி (கனடா) மந்துவில் | 2000 | ... |
| கனகரெட்ணம் கனகசபேசன் கனடா | 21000 | ... |
| செல்வி தாட்சாயினி செல்வமாணிக்கம் உடுப்பிட்டி | 1500 | ... |
| கோணேசநாதன் கொழும்புத்துறை | 1000 | ... |
| அ. இராஜேந்திரம் இமையாணன் வடக்கு | 500 | ... |
| சுப்பர் செல்லையா ஞாபகார்த்தம் செ. ஸ்ரீதரன் கரவெட்டி தெற்கு | 1000 | ... |
| ந. பொன்னையா வல்வெட்டி மத்தி | 2000 | ... |
| என். ஸ்கந்தராஜா மியூஸ்வீதி கொழும்பு | 500 | ... |
| செ. இராசலிங்கம் (கனடா) கிளிநொச்சி | 5000 | ... |
| லோகநாயகி பாலசுப்பிரமணியம் பருத்தித்துறை | 500 | ... |
| ரவீந்திரன் பிருந்தா கொழும்பு | 1000 | ... |

★ சாவுக்குப் பயப்படாதே உயிர்மேல் பற்று வைக்காதே ★

உ

# ஆட்கொண்ட போது

சி. யோகேஸ்வரி

அபிராமிப்பட்டரை அம்பிகை ஆட்கொண்ட அன்றே தனக்கு உள்ளதெல்லாம் அவருக்குரியதென்று அளித்து விட்ட அவர் நன்று வரினும் தீது விளைகினும் எனக்கு ஒன்றும் தெரியாது என்று அபிராமி அந்தாதியில் பாடியதைச் சென்ற கட்டுரையில் கண்டோம்.



மாணிக்கவாசக சுவாமிகளும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டபோது இதே நிலையை அடைந்ததாகப் பாடுகின்றார்.

என்னை ஆட்கொண்ட போதே எனது ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் கொண்டு விட்டாயே, இன்று ஓர் இடையூறு எனக்கு வருமா? நல்லது செய்வாய் பிழை செய்வாய். எட்டுத்தோள்களும் மூன்று கண்களும்கொண்ட எம்பெருமானே, இவற்றிற்கெல்லாம் நானா பொறுப்பானவன்?

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே

என்று பாடுவார் மணிவாசகப்பெருமான். குதிரைகொள்ளச் சென்ற திருவாதவூரர் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட அக்கணமே

திரிப் பதவியையும் குதிரை கொள்ளக் கொண்டு சென்ற பணத்தையும் நீத்த கதை நாம் அறிந்தது. அந்த உடைமை, பதவி மட்டுமல்ல ஆவியும் உடலும் எல்லாமுமே இறைவனால் கொள்ளப்பட்டு விட்டன. என்பதை இத்திருவாசகத்திலிருந்து தான் தெரிந்து கொள்ள முடிகிறது.

அபிராமிப்பட்டர் ''எனக்கு உள்ள எல்லாம் அன்றே உனதென்று அளித்து விட்டேன்'' என்பார். ஆனால் மாணிக்கவாசகரோ ''ஆட்கொண்ட போதே கொண்டிலையோ?'' எனக்கேட்பார். பட்டர் தானே கொடுத்ததாகக் கருதுகின்றார், மாணிக்கவாசகரோ இறைவன் கொண்டதாகக் கூறுகின்றார். இருவரும் வெவ்வேறு அநுபவம் பெற்றிருப்பார்களெனக் கருத முடியாது, ஒருகணங்கூட அல்லாத ஒரு சிறு பொழுதில் அந்த ஆட்கொள்ளப்படும் நிகழ்வில் யார் கொடுத்தது யார் கொண்டதென்பதெல்லாம். புரியுமுன்பே அனைத்தும் இறைவனுடையதாகிவிட அதைப்பற்றி அவர்கள் இப்படிக்கூறினர் போலும்.

''கொள்ளல்'' என்பது விலை கொடுத்துப் பெற்றுக் கொள்வதையே கருதுகிறது. இறைவன் தன்னைக் கொடுத்து அடியவரை முழுமையாக ஆவியும் உடலும் முதற்கொண்டு ஆட்கொள்கிறான். அதனாலேதான் போலும் மணிவாசகரும் கொண்டிலையோ என்றார்.

''நல்லது செய்தாலும் பிழை செய்தாலும் நானோ அதற்கு நாயகமே? நீதான் எல்லாவற்றையும் செய்கிறாய்'' என்றும் கூறியுள்ளார். ''என்செயலாவது யாதொன்றுமில்லை, யாவும் உன்செயலே என உணர்ந்த நிலை.

''கண்ணப்பன் சிவபிரானுக்கு இறைச்சியைப் படைத்தார். நாமும் அதை இறைவனுக்குப் படைத்துவிட்டு உண்ணலாம்.'' என்றுகூறுவோரும் எம்மிடையே உள்ளனர். அதேபோல கொலையைத் திட்டமிட்டுச் செய்துவிட்டு''யாவும் அவனது செயல்'' என்று கூறமுடியுமா? முடியாதே.

ஆவியும், உடலும் உடைமையெல்லாமும் இறைவனுடையதென்றும் அனைத்தும் அவனது செயலே என்றும் உணரும் பரிபக்குவ நிலை ஏற்படவேண்டும். அந்த நிலையை அடைந்தவர் சுயநலமற்றவராக இருப்பார். கண்ணப்பனைப் போல் இரண்டு கண்களையும் கூரம்பு கொண்டு பிடுங்கிக் கொடுக்குமளவு அன்புள்ளம் கொண்டவராக இருப்பர்.

'' அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு'' என வள்ளுவன்

கூறியதுபோல் தனது என்பைக் கூடப் பிறர் நன்மைக்காகக் கொடுப்பவராக இருப்பர். அவர் கொலையும் கொள்ளையும் செய்துவிட்டு அது இறைவன் செயல். தனது செயலல்ல. எனக் கூறமாட்டார். அவரால் திட்டமிட்டு இப்பாதகச் செயல்களைச் செய்யமுடியாது அவர் இறைவனது செயலென்று தன்செயலைக் கூறுவதுபோல எமது செயலை நாம் கூறமுடியாது, அது எம் மைப்பிடித்தாட்டும்அஹங்காரத்தின் செயல் " நான் " 'எனது' என்ற எண்ணங்களோடு செய்யப்பட்ட செயல். எனவே இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட நிலையிலே ஒருவர் செய்யும் செயல்கள் மட்டுமே இறைவனது செயல்கள் என அவரால் கூறக் கூடியவையாகும்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

பிரம்மஸ்ரீ காரைகு. சிவராஜசர்மா அவர்கள் கொழும்பில் உள்ள தற்காப்புக்கான ஜப்பானிய உள்ளக பல்கலைக் கழகத்தினால் ' இலக்கிய கலாநிதிப் பட்டம்" வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சைவசமயம் தொடர்பான ஆழமான அறிவும் சமய தத்துவங்களை மக்களுக்கு எளிமையான உதாரணங்கள் மூலம் வெளிப்படுத்தும். ஆற்றலும் நிறைந்த பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா அவர்களின் பணி மேலும் சிறப்படைய சந்நிதியான் ஆச்சிரமமும் பேரவையும் மனநிறைவுடன் வாழ்த்துகின்றது.

செல்வச்சந்நிதி
தொண்டைமானாறு


ஆச்சிரமப்பணிகளுக்கு உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளவும்.

**T. P. 021 - 2263406**

★ பணம் வருமுன் செலவுகளை உண்டாக்காதே. ★

# சந்நிதியான்

- ந. அரியரத்தினம் -



2002ஆம் ஆண்டு சந்நிதி உற்சவம் முடிவடைந்து இரண்டு மூன்று கிழமைகள் சென்றுவிட்டன. ஒரு வெள்ளிக்கிழமை நேரம் 2-30 மணியை அண்மித்துக்கொண்டிருந்தது. மதிய உணவை அருந்தியபின் ஆலயத்தின் வாசலுக்கு எதிரேயிருக்கும் அந்த ஆலமரத்தின் கீழே படுத்திருந்தவாறு திரு. வே. நாகலிங்கம் அவர்கள் களைப்பாறிக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அவரது காலைப் பிடித்து யாரோ இழுப்பது தெரிந்தது திடுக்கிட்டு கண்விழித்த திரு. நாகலிங்கம் அவர்கள் நான்கு பக்கமும்

★ நம்பிக்கையே இனிமையான எதிர்காலங்களை அமைக்கின்றது ★

பார்த்தார்கள் அங்கே யாரையும் காணவில்லை. அவருக்கு பெரிய அதிசயம் ஏற்பட்டது. என்ன செய்வதென்று தெரியாது குழப்பமடைந்த திரு நாகலிங்கம் அவர்கள் இறுதியாக சந்நிதியானுடைய மூலஸ்தானத்தை உற்று நோக்கி அவனையே தியானித்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் நடந்து முடிந்த விந்தையான அந்தச்செயலின் அர்த்தம் புரியாது அவருடைய உள்ளம் தடுமாற்றம் அடைவதையும் அவரால் தடுக்கமுடியவில்லை.

அப்பொழுது அவரது உள்ளத்தில்நீஆஸ்பத்திரிக்குச்சென்றுவா! நீ ஆஸ்பத்திரிக்குச் சென்றுவா! என்ற உணர்வுகள் மிகத் தெளிவாகவும் திரும்பத் திரும்பவும் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. இந்த உணர்வு திடீரென்று தனது உள்ளத்தில் எவ்வாறு ஏற்படுகின்றதென அவருக்கே வியப்பாக இருந்தது.

சந்நிதியான் விடை தந்தால் தவிர இந்த இடத்தை விட்டு அசையமாட்டேன் என்று ஏறத்தாழ இரண்டரை வருடங்கள் ஆலயத்தில் தங்கியிருந்த திரு. நாகலிங்கம் இப்பொழுது சந்நிதியானே தனக்கு வழிகாட்டுவதாக உணர்ந்து கொண்டதனால் அன்றைய தினமே ஆலயத்திலிருந்து புறப்படுவதற்கு முடிவு செய்தார்கள்.

ஆனாலும் தனியாகவே சந்நிதியில் தங்கியிருந்த திரு. நாகலிங்கம் தான் எப்படிச்செல்வேன்? யாருடைய துணையுடன்? செல்வேன் யார்எனக்கு பொருள் உதவி செய்வார்கள்? என்று சிந்தித்த பொழுது மனதில் ஏக்கமும் பயமும் ஏற்படத்தொடங்கியது அத்துடன் ஆலயத்தின் முகப்பில் அவர் படுத்திருந்த ஆலமரத்திலிருந்து 10 மீற்றர் தூரத்திலிருக்கும் பஸ் தரிப்பிடத்திற்குச் செல்வதற்குக் கூட அவருடைய உடல்நிலை இடங் கொடுக்காதிருந்ததையும் அவர் உணரத்தவறவில்லை.

இவ்வாறான பரிதாபமான நிலையில் அவர் காணப்பட்டாலும் கூட கலியுகக்கந்தனாகவும் ஆபத்பாந்தவனாகவும் விளங்குகின்ற சந்நிதிமுருகனுடைய அருட்கடாட்சத்தின்படி நடைபெறும் காரியம் என்பதால் அவனே வழிகாட்டுவான் என்ற நம்பிக்கை உணர்வுடன் தனது பிரயாணத்தை திரு. நாகலிங்கம் அவர்கள் ஆரம்பித்தார்கள்.

அவருடைய நம்பிக்கை வீண் போகவில்லை திரு. நாகலிங்கம் அவர்கள் ஆலயத்திலிருந்து புறப்பட்டு திரும்பவும் குணமடைந்து ஆலயத்திற்குத் திரும்பும்வரை நடந்தேறிய விடயங்கள் அனைத்தும் அற்புதமான விடயங்களாகவே நடந்தேறின.

★ எப்பொருளிலும் யாரிடமும் பற்று வைக்காதே ★

சம்பவம் நடந்த அன்று வெள்ளிக்கிழமை பி. பகல் 4-30 மணிக்கு அங்கு நின்றவர்களின் உதவியுடன் 752 இலக்க பேருந்தில் ஏறி வியாபாரி மூலையில் குடியிருக்கும் தனது குடும்ப நண்பரிடம் சென்றடைந்தார்கள். அன்றைய பொழுதை அங்கேயே கழித்தபின் அடுத்த நாள் அவர்கள் வழங்கிய புதிய உடுப்பு மற்றும் பண உதவி என்பவற்றைப் பெற்றுக்கொண்டார்கள். அத்துடன் பஸ்நிலையம் வரை அவர்களே அவரைக் கூட்டிவந்து யாழ்ப்பாணம் பேருந்தில் ஏற்றி அனுப்பிவைத்தனர்.

இவ்வாறு வழியில் எதிர்பாராது பல அன்பர்கள் செய்த உதவிகளுடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின் வெளிநோயாளர் பகுதியை வந்தடைந்தாலும் அங்கே தனியாக வந்திருக்கும் தன்னை அவர்கள் வாட்டில் அனுமதிப்பார்களா? என்ற தயக்கம் அவருக்கு ஏற்பட்டது. சிறிது நேரம் அங்கேயே தயங்கிய படி காத்திருந்தபின் அங்கே கடமையாற்றிக் கொண்டிருந்த ஆண் தாதியிடம் தனது நிலைமையை தயக்கத்துடன் வெளிப்படுத்தினார்கள். அத்துடன் தனது பெயரைக் குறிப்பிட்டு விலாசம் செல்வச்சந்நிதி தொண்டைமானாறு என்றும் பதிவுசெய்தார்கள்.

இவருடைய நிலைமையை நன்கு உணர்ந்து கொண்ட அந்த ஆண் தாதியும் வெளிநோயாளர் பகுதியில் கடமையாற்றிய பெண் வைத்தியரும் அவரை நன்கு கவனித்து திருமதி நாகேந்திரம் அம்மா பார்வையிடும் 9ஆம் இலக்க வாட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். 9-ஆம் இலக்க வாட் மேல்மாடியிலிருந்தமையால் இரண்டு ஊழியர்கள் அவரை கதிரையில் இருத்தி தூக்கிச்செல்லும் நிலைமை ஏற்பட்டது தன்னுடைய பரிதாப நிலையை ஒரு பக்கம் சிந்தித்த திரு. நாகலிங்கம் அவர்கள் மறு பக்கம் சந்நிதியான் தன் மீது காட்டுகின்ற கருணையை நினைத்த பொழுது அவரது கண்களில் இருந்து கண்ணீர் சொரிய ஆரம்பித்தது.

9 ஆம் இலக்க வாட்டில் கடமையாற்றிய தலைமை வைத்தியத்தாதி திரு. நாகலிங்கத்தை அன்புடன் கவனித்ததுடன் திங்கட்கிழமை வைத்திய அதிகாரி திருமதி நாகேந்திரம் அம்மா அந்த வாட்டிற்கு வந்தவுடன் முதல் ஆளாக திரு. நாகலிங்கத்தையே பார்வையிடுவதற்கு ஒழுங்கு செய்தார்கள்.

அங்கே திருமதி நாகேந்திரம்அம்மா திரு. நாகலிங்கத்தைக் கண்டவுடன் அவரது பரிதாப நிலைமையைக்கண்டு அதிர்ச்சி அடைந்தாலும் இன்னொருவகையில் அவருக்கு மகிழ்ச்சியும் ஏற்பட்டது. ஆம்! திரு. நாகலிங்கம் வைத்தியஅதிகாரிதிருமதி நாகேந்

திரம் அம்மாவின் சொந்த இடமான மாவிட்டபுரத்தை சேர்ந்தவர்மட்டுமல்ல அவரின் அயல் வீட்டில் வசித்து வந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்தவகையில் திருமதி நாகேந்திரம் அம்மா திரு. நாகலிங்கத்திற்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி அவரைப் பரிசோதனை செய்தார்கள். பரிசோதனை முடிவில் அவருக்கு நோய் எதுவும் இல்லை எனவும் உடனடியாக இரத்தம் ஏற்றுவதற்கும் அடுத்தநாள் குளுக்கோஸ் ஏற்றுவதற்கும் ஒழுங்குகள் செய்தார்கள்.

இவ்வாறு திரு. நாகலிங்கத்திற்கு வைத்தியம் செய்யப்பட்டு சில நாட்களிலேயே அவர் குணமடையும் சூழ்நிலையும் ஏற்பட்டது. அதே நேரம் அங்கே இன்னொரு அதிசயமும் ஏற்பட்டது அங்கே கடமையாற்றிய ஒரு வைத்தியத்தாதி மிகவும் விலைகூடிய ''சஸ்ரோஜின்'' மாவினையும் அதனைகரைத்துக்குடிப்பதற்குத்தேவையான பாத்திரங்கள் மற்றும் சீனி என்பவற்றை எல்லாம் திரு. நாகலிங்கத்திடம் கொடுத்து களைப்பு ஏற்படும் நேரங்களில் அதனைக்கரைத்துக் குடிக்குமாறு வேண்டிக் கொண்டார்கள்.

திரு. நாகலிங்கத்திற்கு மேற்படி நிகழ்ச்சி அதிசயமாகவே தென்பட்டது. ஆஸ்பத்திரிக்குவந்தால் மருந்து தருவார்கள் குளுக்கோஸ் ஏற்றுவார்கள் தேவைப்பட்டால் இரத்தமும் ஏற்றுவார்கள் இவற்றை விட இவ்வாறான விலைகூடிய சத்தான மாவகைகளையும் தருவார்களா என குழப்பமடைந்தார்கள். ஆம்! அவர் விரைவாகக் குணமடைய வேண்டுமென்பதற்காக அங்கே கடமையாற்றிய தலைமை வைத்தியதாதி அவருக்கு அதனை இலவசமாக வழங்கியதை அவர் பின்பு அறிந்து கொண்டார். இவ்வாறு இவர் சந்நிதியை விட்டு ஆஸ்பத்திரிக்குச்சென்று ஏறத்தாழ 10 நாட்களுக்குள்ளேயே பூரண சுகமடைந்துசந்நிதியானிடம்திரும்பி விட்டார். இவர் திரும்பி தற்பொழுது இரண்டு வருடங்கள் முடிந்துவிட்டன இவருக்கு எந்த விதமான நோய்களும் இதன் பின்பு ஏற்படவில்லை. இது பற்றி திரு. நாகலிங்கம் அவர்கள் தன்னுடைய வசனத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

''எல்லாவகையான வருத்தங்களையும் குணமாக்கக்கூடிய மிகப் பெரிய வைத்திய அதிகாரியான சந்நிதியானை நம்பித்தான் நான் இங்கே வந்தேன். இவருடனேயே இரண்டு வருடங்கள் தங்கியிருந்து பின்பு இவர் காட்டிய வழியிலேயே சென்று என்னுடைய எல்லாவகையான வருத்தங்களையும் இலகுவாக மாற்றி தற்பொழுது பூரண சுகதேகியாக இருக்கிறேன்''

★ வழிகாட்டுவதை விட வாழ்ந்து காட்டு ★

திரு. நாகலிங்கத்தினுடைய இயல்பினை முழுமையாக நாம் குறிப்பிடுவது சிறிது கடினமானது அவரது தோற்றத்தைப் பார்க்கின்றவர்களுக்கு பார்த்தவுடன் ஒரு ஏழ்மைத் தன்மையே வெளிப்படும் மேலும் இவரது தோற்றத்தைப் பார்க்கின்ற வேறுசிலர் அவர் எளிமையாக வாழுகின்றார் எனவும் கருதலாம்.

அதே நேரம் சந்நிதியில் செய்ய வேண்டிய மிகச்சிறிய தொண்டுகள் தொடக்கம்மிகவும் காத்திரமான சரியைத்தொண்டுகள் வரை எல்லா வகையான செயற்பாடுகளையும் சலிப்பின்றி உள்ளத்தாலும் உடலாலும் மிகவும் விசுவாசமாக செய்கின்ற செயற்பாட்டை இன்றும் தொடர்ந்து மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவருடன் சம்பந்தப்பட்டதான சிறிய சம்பவங்கள் தொடக்கம், மிகப்பெரிய சம்பவங்கள் வரை எல்லாவற்றிலும் சந்நிதியானுடைய திருவிளையாடல்கள் நிறைந்திருப்பதையும் எம்மால் நோக்க முடிகிறது.

கடந்த 2003-ஆம் ஆண்டு ஸ்ரீ செல்வச்சந்நிதியின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி ஒருசில நாட்கள் கடந்த நிலையில் திரு. நாகலிங்கம் அவர்கள் ஆலயத்தின் தலவிருட்சமான பூவரசுமரத்தின் அடிப்பகுதியில் உள்ள குப்பைகளை வழமை போல கைகளால் துப்பரவு செய்யும் பொழுது அங்கே காய்ந்து சருகாய்ப்போன ஒரு வள்ளிக் கொடி அவர்கைகளில் சிக்கியது அதனை எறிவதற்கு அவருக்கு மனம் வரவில்லை. அதற்கு மாறாக பூவரசமரத்தின் அடிப்பகுதியிலேயே அந்தக் காய்ந்து சருகாய்ப்போன வள்ளிக் கொடியை ஊண்டி அதற்கு ஒரு முறை நீரும் ஊற்றிவிட்டார்கள்.

என்ன அதிசயம் இரண்டு மூன்று நாட்களில் அதுமிகச் செழிப்பாக உயிர்த்து நீண்ட காலமாகப் பேணி வளர்த்த ஒரு வள்ளிக் கொடி போலப் பார்ப்போரின் கண்களையும் உள்ளங்களையும் கவரும் வகையில் செழிப்பானதாகவும் குளிர்மையானதாகவும் அதுமாறிவிட்டது உற்சவத்தின் பிரதம பூசகர் திரு ஆ. சிவசண்முகஐயரும் இவ்வாறு திடீரென ஏற்பட்ட அந்த அற்புதமான வள்ளிக்கொடியின் காட்சியைப்பார்த்து ஆச்சரியமடைந்தார்கள், அடியேனும் அதனை அவதானித்து என்னுள் ஆச்சரியமடைந்தேன். உற்சவத்திற்கு வருகை தந்த அடியவர்களும் இதனை அவதானித்திருப்பார்கள் என்று நம்புகின்றோம் பின்பு உற்சவம் முடிவுறும் தறுவாயில் அதுதானாகவே கருகிப் போனதையும் அவதானிக்கமுடிந்

★ உனது எண்ணங்கள் யாவற்றையும் கட்டுப்பாட்டில் வை. ★

தது. சந்நிதி ஆலயத்தின் உற்ச வத்திற்கும் வள்ளிக்கொடிக்கு முள்ள அதிசயமான தொடர்பை இவ்விடத்தில் நாம் சிந்திப்பது பொருத்தமானது.

சந்நிதிவேலவன் கலியுகக் கந்தன் நேரடியாகவே மேற்படி திரு. நாகலிங்கம், ஆ. சிவகுமார் ஆகிய அன்பர்களுக்கு காட்சி கொடுத்தது தொடர்பாகவும் அன்றைய தினம் ஆச்சிரமத்தில் உறங்கிக்கொண்டிருந்த பபாச் சுவாமிகளுக்கும் சந்நிதியான் காட்சிகொடுத்த அற்புதமான நிகழ்வினை அடுத்த இதழில் அடியார்களுக்கு வழங்குகின்றோம். [தொடரும்...

ஓம் முருகா!

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

முன்னாள் இந்து கலாச்சார அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமாகிய பெருமதிப்பிற்குரிய தி. மகேஸ்வரன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்ற அதே நேரம் அவர் பூரண சுகம் அடைந்து வருவதையிட்டு எமது மன நிறைவையும் வெளிப் படுத்துகின்றோம்.

தன்னலமற்ற சேவை, பரந்த சிந்தனை, அர்ப்பணிப்புடனான சமூகத் தொண்டு என்ற அடிப்படையில் அமைச்சராக இருந்து சேவை ஆற்றியதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுகூறுகின்றோம். அவரு டைய காலத்தில் இந்து சமயம் தொடர்பாக மக்கள் மத்தியில் புத்துணர்ச்சியும், உத்வேகமும் ஏற்பட்டதை அனைவரும் அறிவோம். இந்த வகையில் இந்து சமய மக்களாகிய நாம் அவரது சேவைகளை என்றும் நன்றியுடன் நினைவு கோருவோமாக.

தற்பொழுது கொழும்பு மாவட்டத்தில் மக்களின் அமோக ஆதரவுடன் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட திரு தி. மகேஸ்வரன் அவர்கள் அந்தப்பகுதி மக்களுக்காகவும் பல் வேறு சேவைகளை ஆற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதனை இவ் விடத்தில் குறிப்பிட்டு அவரின் சேவைகள் தொடர்வதற்கு சந்நிதி யானின் திருப்பாதங்களைப் பணிகின்றோம்.

# வைகாசி மாத வாராந்த நிகழ்வுகள்

07-05-2004 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

அறிமுகவுரை :- சி. நாகலிங்கம் (சமாதான நீதவான்)

சொற்பொழிவு :- குளிர்வித்தவன்

வழங்குபவர் :- சுவாமி சித்ரூபானந்தா (சாரதா சேவாச்சிரமம்)

---

14-05-2004 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## மாணவர்களின் நிகழ்வுகள்
## (வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்)

---

21-05-2004 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

அறிமுகவுரை :- ந. நிர்மலானந்தன்
(பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கொடிகாமம்)

சொற்பொழிவு :- பெரியபுராணம் (தொடர்)

வழங்குபவர் :- சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல்
(யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

28-05-2004 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு
# வைகாசி - 2004

வெளியீட்டுரை :- திருமதி புனிதவதி சண்முகலிங்கம்
(ஆசிரியை யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

மதிப்புரை :- திருமதி நாச்சியார் செல்வநாயகம்
(முதுநிலை விரிவுரையாளர் யாழ் / பல்கலைக்கழகம்)

# வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் (2004 - ஜனவரி - ஒக்டோபர்) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோறுக்கு வழமைபோல் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்ட பின் அது பற்றிய முடிவுகள் 2005 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

# அன்பான வேண்டுகோள்

மலருக்கு பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயபெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

ஆக்கங்களை வழங்கும் அன்பர்கள் ஆக்கங்களில் தங்கள் முகவரியினையும் தருமாறு வேண்டுகின்றோம்.


மலர்க்குழு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

பதிவு இலக்கம்: Q.D./58/NEWS/2003